# திராவிடநாடு

23—2—58 | வார வெளியீடு | விலை 16 காசு


## விரைவில் வருவாய்


வள்ளி காந்தன்


வண்டமிழா விரைவில் வருவாயே—இங்கு
வேண்டாத இந்தி வரும் அறிவாயே

தெள்ளு தமிழ்த்தேனை அள்ளிப் பருகிடவே
கள்ளம் கபடமின்றி உள்ளம் மிகவிரும்பி (வண்)

சங்கம் வைத்தன்று சான்ேறார் அரசரெல்லாம்
தங்கம் நிகர்தமிழை தரணியெலாம் பரப்பி
எங்கும் புகழ்பரவ ஏற்றமுடன் வாழ்ந்தார்
பங்கம் அதற்குயெனில் பார்த்தே இருப்பாயோ (வண்)

மூந்தி ஒருமுறையே இந்தி வந்ததிங்கு
செந்தமிழரெல்லாம் சேர்ந்தே அதை யெதிர்த்தே
தந்தே தன்னுயிரைத் தமிழைக் காத்திட்டார்
இந்த நாள்நீயே ஏமாந் திருப்பாயோ (வண்)

எத்திக்கும் ஏற்றமுடன் இனிய திருக்குறளும்
தித்திக்கும் தேன்மொழியாம் சிந்தாமணிச் சிலம்பும்
பத்துப்பாட் டுடனெட்டுத் தொகையுள் அகம்புறமும்
இந்தனையும் இருக்க இந்தியை ஏற்பாயோ (வண்)

# 'அது தான் ஐயா!'

அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

கம்யூனிஸ்டுகள்! எனினும், இதயபூர்வமாக அவர்களைப் பாராட்டுகிறோம்.

*"ஏக இந்தியாவாச்சே! இப்படியா கருதுவது? பிரிவினைப் புத்தி கொள்வதா?", என்று ஏசும், நமது 'ஜனசக்தி'.*

*அவர்களுக்குப் பாடம் சொல்வதுபோல, நடந்து கொண்டிருக்கின்றனர், அவர்கள். ஏனோதானோக்களல்ல, டில்லி மேல்சபை உறுப்பினர்கள். பி. நாராயண நாயர், என். சி. சேகர் என்பது அவர்கள் பெயர்.*

*சபையில், திருமதி டாக்டர் சீதா பரமானந்த் எனும் காங்கிரஸ் உறுப்பினர் பேச எழுந்தாராம். உட்காரும் வரையில் இந்தியிலேயே பேசினாராம்! ஆங்கிலம் தெரியாதோ, என்றெண்ணுகிறீர்கள்—டாக்டராச்சே! —தெரிந்தும், வேண்டுமென்றே இந்தியிலேயே பேசினாராம்!!*

*இதை ஆட்சேபித்திருக்கிறார்கள், அந்த இரண்டு கம்யூனிஸ்டு உறுப்பினர்களும். கேட்கவில்லை அம்மையார். சொல்லிச் சொல்லிப் பார்த்திருக்கிறார்கள்; அப்போதும் அம்மையார், அசையவில்லை. உறுப்பினர்களுடைய பொறுமை எல்லைமீறிப் போய்விட்டது. எழுந்து,*

**தலைவர் அவர்களே!**

**இப்படி, இந்தியில் பேசப்படுமேயானால், நாங்களும், எங்கள் தாய் மொழியான மலையாளத்திலேயே பேசுவோம்.**

*என்று தெரிவித்திருக்கிறார்கள். அம்மையார் அஞ்சவில்லை. அதோடு, "இந்தி, பொதுமொழி தெரியுமா?", என்றும் கேட்டிருக்கிறார். உடனே, "ஓகோ! அப்படியா?", என்று இருந்துவிடவில்லை, அவர்கள். சபையிலிருந்து, எழுந்தார்கள்.*

**"அம்மையாரே!!**

**தங்களுடைய இந்தப் பேச்சு முடிகிறவரையில், நாங்களிருவரும் சபைக்கு வெளியிலேயே இருந்துவிட்டு வருகிறோம்."**

*என்று, எழுந்து போயிருக்கிறார்கள்! அது மட்டுமல்ல, அந்த அம்மை பேசிவிட்டு உட்கார்ந்ததும், சபைக்குள் நுழைந்தார்களாம்!!*

*கேரளத்தினர், — கம்யூனிஸ்டுக் கட்சியினர் — அவர்கள், இது போல, மொழிப்பற்றினைக் காட்டிக் கொண்டது, பெருமைக்குரியது தானே.*

* * *

"என்னப்பா! எப்படி, ஒரு சிறு நாடு வாழமுடியும்? இந்தியாவிலிருந்து துண்டித்துக் கொண்டா, திராவிடமோ, தமிழ் நாடோ வாழமுடியும்? அகில உலகத் தொடர்பும் நட்பும் வேண்டாமோ! வியாபாரமும் பொருளாதார உதவியும் தேவைப்பட்டாதோ?", *என்று, 'எல்லாம் தெரிந்த' மேதைகள்கூடப் பேசுவதுண்டு. காங்கிரசார் இருக்கட்டும், அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள். காங்கிரசைவிட, பொருளாதாரம் பற்றி, அதிகம் படித்தவர்கள் என்று கருதப்படும் கம்யூனிஸ்டுகள்கூடப் பேசுகிறார்கள். சிறு நாடு வாழமுடியாது, என்று வாதாடும் நமது "ஜனசக்தி".*

*அதற்கு, இதோ, செயல்மூலம் போதனை செய்கிறார்கள்! வேறு யாருமல்ல, ரஷ்ய சர்க்கார்தான்!! திராவிடத்தோடு ஒப்பிட்டால் மிகச் சிறிய நாடு இலங்கை. அந்த இலங்கை சர்க்காரும், மிகப்பெரிய ரஷ்ய சர்க்காரும், சம அந்தஸ்துடன் உட்கார்ந்து ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கிறார்கள் — பிப்ரவரி 15ந் தேதி.*

**இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்காக 14½ கோடி ரூபாய் தரப்போகிறது ரஷ்யா! பணம் மட்டுமல்ல இன்னும்பல உதவிகளையும் செய்வதாக உறுதி அளித்திருக்கிறது!!**

*"சின்ன நாடாச்சே—இந்தியாவிலிருக்கும் நேரு பண்டிதரைப் போல் மிகப்பெரிய தலையல்லவே பண்டார நாயகா—எப்படி ஒப்பந்தம் செய்யலாம், நாம் உதவப் போகலாம்," என்று. எண்ணவில்லை அவர்கள்! உதவி செய்திருக்கிறார்கள்—இதுபோல, உதவியை, பிரிந்த திராவிடம் பெற்றால் யார் மறுக்கமுடியும்? பெற வேண்டிய அவசியம் ஏற்பட்டால், பெற்றுக்கொண்டு, ஏன் வாழ முடியாது!!*

* * *

*"செச்சே! இந்த டில்லியின் தொல்லை, மகாத் தொல்லை. எல்லாத் துறைகளிலும், மாகாணங்களுடைய கழுத்தை அறுக்கிறது. முன்னால் போனால் முட்டுகிறது. பின்னால் வந்தால் உதைக்கிறது. பெரிய தொல்லையாப்போச்சு!", என்று வேதனைக்குரல் எழுப்புவோருண்டு.*

*கேரள சர்க்காரின் கல்வி மந்திரி முண்டசேரி, வேதனைக்குரல் எழுப்பவில்லை-கண்டிக்கவே செய்கிறார். அகில இந்தியாவுக்கு விரோதமாயிற்றே— ஜீவானந்தம் சீறுவாரே, இராமமூர்த்தி கோபித்துக் கொள்வாரே என்று பார்க்கவில்லை, அவர் — ஏனெனில் நாட்டை ஆள்கிறவர் அவர். அவருக்குத்தானே டில்லி, என்னென்ன தொல்லைகள் கொடுக்கும் என்பது தெரியும்.*

**டில்லி, மாநிலங்களுக்குள்ள உரிமைகளை மதிக்கவில்லை-**

**வெள்ளையன் அனுசரித்த அளவுக்காவது நடந்துகொள்ளும்படி மத்ய சர்க்காரைக் கோருகிறோம்.**

*திருச்சியில் பிப். 17ந் தேதி, இவ்வண்ணம் பேசியிருக்கிறார். கேரள சர்க்கார், கல்வி மசோதா ஒன்றைக் கொண்டுவந்தது. பாடபுத்தகங்களைச் சர்க்காரேபிரசுரம்செய்யவேண்டும் என்பதே அம்மசோதா. அப்படி ஒரு மசோதா கொண்டு வருமுன், மத்ய சர்க்காரைக் கேட்டார்களாம். மத்ய சர்க்காரும் சில ஆலோசனைகளை அளித்து, கொண்டு வாருங்கள் என்றார்களாம். அவர்கள் வார்த்தையை நம்பி, கேரள சர்க்காரும், அம்மசோதாவைக் கொண்டு வந்து சட்டமாக்கி டில்லிக்கு அனுப்பினார்கள். எந்தச்*

*(14-ம் பக்கம் பார்க்க)*

# திரும்பினார்

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [23-2-58] தனிப் பிரதி 16-காசு [இதழ் 32

"இது என்ன மகிழ்ச்சிக்குரிய சமயமா! மலர் மாலைகளை எல்லாம் திருப்பி எடுத்துக்கொண்டு போங்கள்", என்று சொன்னாராம், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் இராஜாராம்.

பதவியை இழந்துவிட்டு, விமானத்தில் வந்திறங்கிய டி. டி. கே-யை., அமைச்சர்களும் பிரமுகர்களும் போய் வரவேற்றிருக்கிறார்கள்! அப்போதுதான், காங்கிரசின் தமிழ் நாட்டுத் தலைவர், இப்படிச் சொல்லியிருக்கிறார். டி. டி. கே., சோகத்தைப் புன்னகையால் மறைத்துக்கொள்ள முயன்றார், என்கிறது ஒரு ஏடு! சுப்பிரமணியம், தலைகுனிந்து வருவதைப் படம் எடுத்துப் போட்டிருக்கிறது, இன்னொரு ஏடு!!

டி. டி. கே., டில்லியை விட்டு அனுப்பப்பட்டுவிட்டார். அந்தச் சம்பவம், தமிழ் நாட்டுத் தலைவர்களுக்கு, சோகமாகவும் வேதனையாகவும் உள்ளது. ஏனெனில், டி. டி. கே., தானாக 'ராஜினமா' செய்தார் என்பதைவிட, "ராஜினமா செய்யும்படியான சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டார்", என்றே பலரும் கருதுகின்றனராம். டி. டி. கே. - யும், "நான் பம்பாயில் நடைபெற்ற சதிக்குப் பலியாக்கப்பட்டேன்", என்று சொல்லுகிறார்!!

*

முந்திரா விவகாரம், ஏதோ டில்லி அரசில் ஏற்பட்ட திடுதிடுப்பான சம்பவம் போலக் காட்ட முயற்சிக்கிறார்கள். ஆனால், இந்தப் பத்தாண்டு கால நேரு ஆட்சியில், எத்தனையோ 'ஊழல்கள்' நடந்திருக்கின்றன. உர ஊழல்—ஜீப் கார் ஊழல்—தாமோதர் அணைக்கட்டு ஊழல் — வெளிநாட்டுத் தூதுவர்கள் ஊழல்—குண்டு வாங்கிய ஊழல்—என்று எத்தனை யெத்தனையோ உண்டு! அப்போதெல்லாம், இதுபோல, எதுவும் நடக்கவில்லை — எந்த மந்திரியும் விலக்கப்படவில்லை; மாறாக, உணவு மந்திரியாக இருந்த கே. எம். முன்ஷி ஒரு பெரிய மாகாணத்தின் கவர்னராகவே ஆனார்! ஆகவே, முந்திரா ஊழல் அல்ல, டி. டி. கே. விலகச் செய்யப்பட்டதற்குக் காரணம்; இன்னும் ஏதேதோ இருக்க வேண்டும்' என்று கருதுகிறார்கள் காங்கிரஸ்காரர்கள்!!

அவர்கள் கருத்து உரம் பெறும் அளவிலேயே, நிகழ்ச்சிகளும் உள்ளன:— சர்க்காருக்கு ஆஜரான செதல்வாட் எனும் அட்டர்னி ஜெனரல், சர்க்காருக்காக வாதாடவில்லை—சர்க்காரின் ஒரு அங்கமான நிதி மந்திரியைப் பிரதிவாதியாக்கி யிருக்கிறார். சர்க்காரின் ஆதரவாளரும், நேருபோன்றவர்களின் சகாவுமான கே. எம். முன்ஷியே வழக்கில் ஆஜராகி, நிதி அமைச்சர்மீது, குற்றம் சாட்டும் முறையில் வாதாடியிருக்கிறார். இவைகளை யெல்லாம் பார்க்கும்போது, டி. டி. கே. சொல்வதுபோல, "ஏதோ ஒரு சதி", நடந்திருக்கிறது என்று தெரிகிறது.

அந்தச் சதி என்ன? பணக்காரர்களுக்குச் சொத்து வரி போட்டார்—அதனால், பணக்காரர்கள் எப்படியாவது வெளியேற்றுவதென முயற்சித்து, வெற்றி பெற்றார்கள்—என்று ஒரு சாரார் கூறக்கூடும்! இன்னொரு சாரார், இவர் அமெரிக்காவுக்கு நண்பரானார், ஆதலால் எப்படியாவது வெளியேற்ற வேண்டுமென்று இந்தக் கம்யூனிஸ்டுகள் செய்துவிட்டார்கள் என்று சொல்லக்கூடும்!! டி. எஸ். பட்டாபிராமன் என்கிற பார்லிமெண்டு உறுப்பினர் "பணக்காரர்களும், கம்யூனிஸ்டுகளும் சேர்ந்தே, இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள்," என்கிறார். வேறொரு சாரார், அகில உலக அரங்கில் தன் நிலைக்கு 'இன்னொரு அதிர்ச்சி வைத்தியம்' அளித்துவிட்டார் பண்டித நேரு, என்றும் சொல்லக்கூடும். "பூனை இடது பக்கம் குதித்தாலும் இலாபம், வலது பக்கம் குதித்தாலும் இலாபம் என்கிற இடத்திலிருப்பவர் நேரு பண்டிதர். பார், பார்! அமெரிக்காவுக்கு கைகட்டி நிற்கிறார், என்று சொன்னீர்களே. அந்த டி. டி. கே. போய்விட்டார், என்று ரஷ்யா போன்றவைகளுக்கு கண்சாடை செய்யலாம் அவர். பார்! பார்!! தொழில்களைத் தேசிய மயமாக்கி பணக்காரர்களுக்குத் துரோகம் செய்வதாகச் சொன்னீர்களே — அவரை, அடக்கிவிட்டேன், என்று டாடா பிர்லாக்களுக்கும் சொல்லாமல் சொல்லலாம் அவர். பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளைப் பார்த்து—எங்கள் இந்தியாவில் ஜனநாயகம் எப்படியிருக்கிறது பார்த்தீரோ? ஊழல் என்றதும், பொது விசாரணை நடத்தினோம். அமைச்சரே விலகிக் கொண்டார் — என்று மார்தட்டிப் பேசக்கூடும்—எனவே, அவருக்கே எதுவும் இலாபந்தான்", என்று பேசாமலிருந்துவிட்டார், என்று கருதக்கூடும். தென்னாட்டாரான டி. டி. கே-யை, வடநாட்டார் விரும்பவில்லை யென்றும், நீண்ட நாட்களாக இருந்த இந்த ஆசையை, இப்போது தீர்த்துக்கொண்டனர் என்

றும் கருதப்படுகிறது. இது, யோசிக்கவேண்டிய ஒன்றாகும்.

*

டி. டி. கே. எப்பேற்பட்டவர் என்பதும், அவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் காங்கிரஸ் 'தியாகி' ஆனார் என்பதும், இவருடைய இறந்த காலம் எப்படிப்பட்டதென்பதும், இவருக்கு ஏழைகள்மீது அன்பு சுரக்குமா — சீமான்கள்மீது பாசம் அதிகம் வருமா என்பதும், நாட்டிலிருப்போருக்கு நன்றாகத் தெரியும். அதேபோல, டில்லி ஒன்றும் 'கற்புக்கரசி' அல்ல என்பதும் தெரியும்! முந்த்ராவை விட எத்தனையெத்தனையோ, ஊழல்கள் மலிந்த காடு, டில்லி —அதுபோதெல்லாம் இதுபோன்ற விசாரணைகள் நடத்தப்படவும் இல்லை — முன்ஷி போன்றவர்கள் வெளியே அனுப்பப்படவுமில்லை! மாறாக, இப்போது தான் நேர்ந்திருக்கிறது!!

காரணம் என்ன? வடக்கு, தெற்கை விரும்பவில்லை. தென்னாட்டு நபர், நேருவுக்கு அடுத்தபடி இருப்பதை, அங்குள்ளவர்கள் விரும்பவில்லை.

"பார்த்தாயா, பார்த்தாயா! இதில்கூட வடக்கு, தெற்கைக் கொண்டுவந்து புகுத்தப்பார்க்கிறாயா?" என்று சீறக்கூடும், காங்கிரஸ் பீரங்கிகள். இப்படி நாம், சொல்லவில்லை! இதைப் பெரிய காரணமாகக் காட்டி, இதன்மூலம்தான் வடக்கின் வஞ்சனையை விளக்கவேண்டுமெனும் அவசியத்திலும் நாம்இல்லை. ஆனால், 'வடநாட்டினர், வடநாட்டினர்' என்கிற பேச்சு, காங்கிரஸ் பார்லிமெண்டு கட்சி நடத்திய இரகசியக் கூட்டத்தில் பெருத்த அளவில் அடிபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

முந்த்ரா ஊழல் விசாரணைபற்றி காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்கள் கூட்டம், டில்லியில் நடந்தபோது; டாக்டர் சுசிலாநய்யார், என்பவர் பேசியிருக்கிறார்:-

"இந்தப் பிரச்னையிலும், வடக்கு — தெற்கு என்று பல உறுப்பினர்கள் அலசிப் பேசியது, எனக்கு வருத்தம் தந்தது. இதுகூட, மாகாண உணர்ச்சியிலேயே நடைபெற்றதாகக் குறிப்பிடப்பட்டது கண்டு வேதனை அடைகிறேன்."

இரகசியக் கூட்டம் அது! எனவே, எவரெவர் பேசினர், என்னென்ன பேசினர் என்கிற விபரம் இல்லை!! எனினும், வடக்கு தெற்கு என்று யார் பேசியிருக்கப் போகிறார்கள்? காங்கிரஸ் பார்லிமெண்டு உறுப்பினர்கள் கூட்டத்தில் நமது சம்பத்தும், தர்மலிங்கமுமா போய்ப் பேசியிருக்க முடியும்? ஒருக்காலுமில்லை. தெற்கிலிருந்து சென்ற காங்கிரஸ் எம். பி-க்கள்தான் பேசியிருக்கவேண்டும்! அவர்களே, அப்படி, வடக்கு தெற்கு என்று பேசினார்கள் என்றால், அதற்கு ஏராளமான காரணம் இருந்திருக்க வேண்டும்!! இல்லையெனில். அவர்களா, அதுவும் நேரு எதிரில், "வடக்கு தெற்கு" என்பார்கள்—பம்பாயில் நடந்த சதி என்று டி. டி. கே.-யே சொல்லுகிறார்—தென்னாட்டு எம். பி-க்கள் வடக்கு, தெற்கு என்று பேசியிருக்கிறார்கள் — எனவே, டி. டி. கே. அனுப்பப்பட்டதற்கு, வடக்கு அவரை விரும்பாததும் ஒரு காரணம் என்று புரிகிறது.

*

சென்ற ஆண்டுப் பொதுத் தேர்தலின்போது தான், டி. டி. கே. நாட்டுக்கு எவ்வளவு அவசியம் என்று மேடைகளில் பேசினார்கள். அவருடைய திறமையை விளக்கி, நேருபண்டிதரே, ஒரு அறிக்கை விட்டார். அப்படிப்பட்டவர், ஓராண்டுக்குள், திருப்பி அனுப்பப்பட்டதும், வந்தவருக்கு மாலைபோட்டு வரவேற்கக் கூடாத அளவுக்கு தமிழ் நாட்டுக் காங்கிரசினர், துக்கம் தோய்ந்த முகத்தோடு வரவேற்கவும் ஆயிற்றே, என்பதுதான் நமக்குப் பரிதாபமாயிருக்கிறது. ஆர். கே. சண்முகம், ஜான் மத்தாய், ஆகியவர்களைப்போல ஆக்கப்பட்டுவிட்ட டி. டி. கே.-க்கும், தமிழ்நாட்டுக் காங்கிரசுக்கும், நமது அனுதாபங்கள்.

*

# சேலம் மாநாடு

—○—

சேலம்! — எப்போதுமே, செயல்வீரர்களும், சிறந்த நற்றொண்டர்களும் வாழும் மாவட்டம். கடந்த 16, 17 தேதிகளில், வேலூரில், மேற்படி மாவட்டத்தின் 3-வது மாநாடு கலைஞர் மு. கருணாநிதி தலைமையில் நடிப்புப் புலவர் கே. ஆர். இராமசாமி துவக்கிவைக்க மிகவும் சிறப்பாக நடந்திருக்கிறது. இருவரையும் பற்றித் தமிழகம் அறியும்! கருணாநிதியின் வீரமிக்க பேச்சும், நடிப்புப் புலவரின் கீதக் குரலும், வந்திருந்த பல்லாயிரக் கணக்கானவர்களை மகிழ்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது. தோழர்கள் நாகூர் அனிபா, இராசு, நித்தியானந்தம் ஆகியோரின் கழகக் கீதமும், முத்துக்கண்ணுவின் நாதசுர இசையும் எல்லோரையும் களிப்பிலாழ்த்தியது. பொதுச்செயலாளரும், சட்டசபை உறுப்பினர்களும், கழகத்தின் முன்னணிவீரர்களும் கலந்துகொண்டு, மாண்ட மாவீரர் அழகிரியின் பெயரால் அமைந்த பந்தலிலே, திராவிடத்தின் பிரச்சினைகளையும், தி. மு. க. - வின் தொண்டினையும் எடுத்துச் சொல்லினர். இரண்டு நாட்களிலும் வந்திருந்தோரின் ஆர்வமும் எழுச்சியும் பெரியதோர் காட்சியாக இருந்தது! முதியவர் ஜீ. பி. சோமசுந்தரம் தலைமையில், ப. இராமலிங்கம் செயலாளராக இருக்க, பி. எம். குப்புசாமி பொருளாளராக விளங்க, தாண்டவன் தொண்டர்படைத் தலைவராக நிற்க, அவர்களுக்கு உறுதுணையாக எண்ணற்ற தோழர்கள் உலவும் வரவேற்புக் குழுவென்றால் கேட்கவா வேண்டும்? கழகம் பிறந்த இடம் சேலமன்றோ! அச்சேலத்தில், எல்லா வகையிலும், முன்பைவிட இப்போது, கழகத்தின் வளர்ச்சியைக் காண்கிறோம். குறிப்பாகச் சிற்றூர்களிலும், பட்டி தொட்டிகளிலும், நாம் கண்டு வரும் ஆர்வம், சாதாரணமானதல்ல. இந்த எழுச்சி, இன்னும் பெருகும் என்கிற அறிகுறியாக அமைந்திருந்தது, சேலம் மாவட்ட மாநாடு. தோழர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம், வளர்க அவர்தம் ஆர்வம் என்றும் வாழ்த்துகிறோம்!!

★

# வடிவுக்கு வாய்த்த மணாளன்!

அடுத்த புதன் கிழமை இரவு சென்னையிலிருந்து புறப்படும் இந்தோ-சிலோன் எக்ஸ்ப்ரஸில் சோமசுந்தரத்தின் குடும்பம் சென்னையைவிட்டுத் தஞ்சாவூருக்குப் புறப்பட்டது.

திருமண வீட்டிலே நடந்த ஒவ்வொரு சடங்கும் கந்தசாமியின் ஆத்திரத்தைக் கிளறியது. 'நீங்களும்கூடப் பட்டைப் போட்டுக்கொண்டு, அந்தச் சடங்குகளுக்கு ஈடுகொடுக்கிறீர்களே?' என்று தனியாகப்பார்க்கும்போது தந்தையைக் கோபித்துக்கொண்டான். 'என்ன செய்வது? செய்யாவிட்டால் மதிக்கவில்லை என்பார்கள்!' என்று சமாதானம் கூறினார் சோமசுந்தரம்.

மற்றோர் பக்கத்திலே பெண்கள் பகுதியிலே உருக்மணி அம்மாள் தன் காரியத்திலே கண்ணாக இருந்தாள். சில வேலைத் தொந்திரவால் கல்யாணத்திற்கு வர முடியாத காரணத்தினால், தன் மனைவி பார்வதியை மட்டும் அனுப்பி இருந்தார் திருவாரூர் தேவராச முதலியார்.

"ரொம்ப நாளாச்சு, பார்த்து! பொண்ணு சௌக்கியமா?" என்று ஆரம்பித்தாள் உருக்மணி.

"சௌக்யம்தான். நீங்கள்தான் பட்டிணம் போன பிறகு இந்தப் பக்கமே வருவதில்லை. வந்தால் கூட எங்களை நினைத்துப் பார்ப்பதில்லை!" என்றாள் பார்வதி.

உருக்குவுக்கு இது போதாதா!

"வரணும்னுதான் எண்ணம். எங்கே ஒழியறது? வந்தால் தியாகராஜ சுவாமியைத் தரிசிக்கலாம் என்று பார்க்கிறேன்..." என்று இழுத்தாள்.

"ஏன், இப்போதுதான் வாயேன், போகிற வழிதானே? அப்படியேமாயவரம்போய் இரயில் ஏறிக்கொண்டால்போச்சு" என்று அழைத்தாள் பார்வதி.

"பார்க்கலாம்...அவரைக் கேட்டுப் பார்க்கிறேன்" என்று கணவனுக்குக் கொஞ்சம் மதிப்புக் கொடுத்துப் பிகுவோடு பேச்சை முடித்தாள் உருக்மணி.

முன்பே ஏற்பாடு செய்திருந்தபடி லீவு அதிகம் இல்லாத காரணத்தினாலே சோமசுந்தரம் நேராகச்சென்னைக்குப்புறப்படவும் உருக்மணியும் அவள் மூன்று குழந்தைகளும், பார்வதியோடு திருவாரூர் புறப்பட்டனர். இந்தப்

**ப. வாணன்**

பயணம் கந்தசாமிக்குக் கொஞ்சம் கூடப்பிடிக்கவில்லை. தியாகராஜராவது, சுவாமியாவது என்று முணுமுணுத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தான். இரயிலிலே செல்லும்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது.

'நம்ப பையன் இந்த வருஷம் பி.ஏ. பரிட்சை எழுதப்போகிறான், அவனுக்குப் படிபபிலேதான் கவனம்; அவனுக்கு வீண் பேச்சு பிடிக்காது' என்றெல்லாம் தன்னை வைத்துக்கொண்டே தன்னைப் பற்றி அம்மா கூறுவதும், அதற்குத் தன் மகளைப்பற்றிய பெருமைகளைப்பார்வதி பதிலாகத் தருவதைக் கண்டதும்தான் கந்தசாமிக்கு ஓரளவு விஷயம் விளங்கியது. அவனையறியாமலே ஒரு பக்கம் வெட்கம் வந்தது. மற்றொரு பக்கத்திலே கோபம் வந்தது. 'இந்த நாட்டிலே 'மரப்பாச்சி' கல்யாணம் செய்கின்றனர் பெற்றோர்கள் என்று எத்தனை நாள் மேடைகளில் பெரியோர்களைத் திட்டி இருக்கிறான். இப்பொழுது அவனுக்கே அந்தக் கோலமா? கந்தசாமிக்கு ஆத்திரம் பொங்கியது.

ஆனால் திருவாரூரிலே ஏற்பட்ட அனுபவம் அவன் வாழ்க்கைப் பாதையையே மாற்றியது. தேவராஜ முதலியார் வீட்டில் இறங்கியதுமே அவர்களை வரவேற்று நின்றது இலட்சுமிதான். தாயாரை வரவேற்க வாயிற்படிக்கு வந்த இலட்சுமி வண்டியிலிருந்து தன் தாயாரைத் தொடர்ந்து வேறு ஒரு குடும்பமும் இறங்குவதைக் கண்டவுடன் உள்ளே ஓடி மறைந்தாள். ஆனால் அந்த ஒரு விநாடிக்குள் அவன் கண்ட காட்சியை கந்தசாமியால் மறக்கவே முடியவில்லை. அள்ளிச் சொருகிய கூந்தலில் அழகான ரோஜா மலர் ஒன்று துவள அந்தச் சிற்றிடை மேனியாள் மான்குட்டி போலத் துள்ளி ஓடினாள். எதை எதையோ நினைத்து ஆத்திரப்பட்டுக் கொண்டு வந்த கந்தசாமி கொஞ்சம் நிதானமாக வீட்டிற்குள் சென்றான், உள்ளே போனதுமே, ஆபத்து வந்தது.

பார்வதியின் தாயார் மங்களத்தண்ணி அவர்களை வரவேற்றாள். "வாடியம்மா, உருக்மணி! எத்தனை வருஷமாச்சு பார்த்து. சரி நாழியாகிவிட்டது. இரயில்தீட்டு. முதலில் அந்தத் துணிகளை மாற்றிக் கொண்டு சாப்பிட வாங்க......" என்றாள்.

கந்தசாமிக்குச் சுருக்கென்றது. இதற்குள் தேவராஜமுதலியாரே வந்துவிட்டார். ஒரு மேல்த்துண்டுடன் காட்சியளித்த அவர் நெற்றி, கைகள் எங்கும் திருநீற்றுப் பட்டை மிகத் தெளிவாகக் காட்சியளித்தது. "நமசிவாயம்!" என்று கூறிக்கொண்டே "வாங்க தம்பி! உனக்கெல்லாம் என்னை ஞாபகமிருக்காது. ரொம்பச் சின்ன வயதிலே பார்த்தது!" என்று அன்பாக உபசரித்தார்.

சாப்பிட உட்காரும்போது திருநீறு அணியாமல் தப்பிக்கொள்வதிலிருந்து ஒவ்வொரு கட்டமும் ஒரு பெருஞ் சோதனையாக இருந்தது. விருந்தாளியாகப்போன வீட்டிலே அசாம்பவிதமாக நடந்துகொள்ளக் கூடாது என்று மிக முன்ஜாக்கிரதையாக நடந்துகொண்டு வந்தான் கந்தசாமி. வீட்டிற்குள் நுழையுமுன் பார்த்த அந்தப் பூங்கொடி மறுபடியும் காட்சி தருவாளா என்று ஏக்கம் வேறு ஒரு பக்கம் வந்தது. சாப்பிட்டு முடிந்தவுடன் அந்த ஆராய்ச்சியில் ஈடுபடலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது "வாங்க தம்பி நம்ப கடைக்குப் போகலாம்!" என்று அன்போடழைத்தார், தேவராஜர்.

கடைத்தெருவிலே 'காஸ்மாபாலிடன் கபே' என்று பெரிய போர்டு போட்ட காபி ஹோட்டல் தான் அவருடையது. 'காஸ்மாபாலிடன்கபே தோன்றுவதற்கு மூலகாரணம் இராமச்சந்திர தீக்ஷிதர்தான். அவர் ஆசையை மூட்டினர். தனக்கிருக்கிற புத்திசாலித்தனத்தை உபயோகப்படுத்தி அவர் மட்டும் ஒரு பத்தாயிரம் ரூபாய் முதல் போட்டால் ஒரே வருஷத்தில் முதலை எடுக்கலாம் என்று சாதித்தார் தீக்ஷிதர்.

பொடி போடுவது கூட வீண் செலவு என்று கருதும் தேவராஜர் தீக்ஷிதரின் திட்டத்திலே மயங்கினர். அதன் பலன்தான் கடைத்தெருவிலே இருந்த 'காமாட்சி விலாஸ்' 'காஸ்பாமாலிடன் கபே' வாக மாறியது. ஒரு பழைய ஹோட்டலை விலைக்கு வாங்கிப் புதுமாடல் ஹோட்டலாக மாற்றினர் தீக்ஷிதர். ரேடியோ, ரெப்ஜிரேட்டர், சலவைக்கல் மேஜை, ஸ்ப்ரிங் நாற்காலி எல்லாம் பட்டணத்திலிருந்து புதிதாகத் தருவிக்கப்பட்டன. புதிய முறைக்கு ஏற்ற வண்ணம் வியாபாரமும் நன்றாக நடக்க ஆரம்பித்தது. கோடித்தெரு தேவராஜ முதலியாரும் அந்தஸ்தில் உயர்ந்துகொண்டே இருந்தார். உள்ளூர்க் கோவில் தர்மகர்த்தாக்களில் ஒருவரானர். பாங்கில் டைரக்டரானர். முனிசிபல் கவுன்சிலருமாகிவிட்டார். இவ்வளவு பதவிகளுக்கும், அந்தஸ்துக்கும் தீக்ஷிதர்தான் காரணம் என்று கடைத்தெருவே ஒத்துக்கொண்டது. ஆகவேதான் கந்தசாமியை அழைத்துக்கொண்டு உள்ளே நுழைந்தவுடனேயே, காசை வாங்கிப் போட்டுக்கொண்டிருந்த தீக்ஷிதர் எழுந்து "என்ன முதலியார்வாள், உங்களுக்குக் கொஞ்சம் கூட இங்கிதம் தெரியல்லே. இப்பதான் ஆறுமுகம் வந்து சொன்னன். பட்டினத்திலே இருந்து தம்பி வந்திருக்கென்று. சரி ஒரு வண்டி அனுப்பலாம் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். அதற்குள் நீங்கள் அவரை நடத்தி அழைத்துவரேள்......சரி, இருக்கட்டும். வாங்கோ..." என்று பிரமாதமான வரவேற்பு நிகழ்த்தினர்.

இந்த உபசரிப்புகளை எல்லாம் பார்க்கும்போது, தான் அவர் வீட்டு மாப்பிள்ளையாவது மிகப் பெருமைக்குரிய விஷயம் என்று கருதினன் கந்தசாமி. ஆனல் இடையிடையே ஊசிபோல குத்தியது சில விஷயங்கள்.

"இந்த ஊரிலே கோயிலும் குளமும்தான் விசேஷம்! மாலை போகலாம்!" என்றுர் தீக்ஷதர். நருக்கென்று குத்தியது கந்தசாமிக்கு. ஒரு அசட்டுச் சிரிப்போடு அப்போதைக்கு சமாளித்துக்கொண்டான். சென்னையிலே அந்த மாதிரி யாராவது கூறி இருந்தால் கோயிலையும் குளத்தையும் நம்பி இந்த நாட்டிலே வீணுகும் மக்களைப்பற்றிப் பிரசங்கமாரியே பொழிந்திருப்பான். அவனையறியாமலேயே அன்று சும்மா இருந்தான்.

அன்று மாலை கந்தசாமி கோயிலருகில் போனன்—ஆனல் தனிமையில். கலைக்கண்ணோடு கோயிலைப் பார்த்துவரத்தான்! அங்கே எதிர்பாராத விருந்து கிடைத்தது அவனுக்கு.

அவன் வெளியில் நின்றுகொண்டிருக்கும்போதுதான் அவன் தாயாரும் தங்கை இரமணியும் பார்வதியம்மாளும் இவர்களுடன் அந்த பெண்மானும் கோவிலுக்கு வந்தனர். அவர்களைக் கண்டவுடன் மறைந்து நின்று அவளை நோக்கவேண்டுமென்று அவன் திட்டமிடவே இல்லை. ஆனல் அப்படிச் செய்யச்சொல்லி ஏதோ ஒரு புது உணர்ச்சி அந்த நேரத்திலே அவனைத் தூண்டியது. ஓரத்திலே நின்று அவளை நோக்கினன். காலையிலே இருந்த அள்ளிச் சொருகியகொண்டை இல்லை. அந்த இடத்திலே அலங்கரிக்கப்பட்ட பின்னல் இருந்தது. அவள் கண்களிலே காணப்பட்ட குறும்புப் பார்வை, கன்னத்திலே விழுந்த குழிகள். உடலிலே இருந்த ஒழுங்கான வளைவுகள், நடையிலே இருந்த கவர்ச்சி எதையுமே பார்த்தவர் ரசிக்காமல் இருக்கமுடியாது. அப்படியே அவளைப் பார்வையால் பருகிக்கொண்டிருந்தான் கந்தசாமி. சிலைபோல நிற்கும் அவனையும் பார்த்துவிட்டாள் அந்தக்கள்ளி. தலையைக் குனிந்து கொண்டாள், நாணத்தால். அவனுக்கும் வெட்கம் வந்தது. என்ன பைத்யக்காரத்தனம் என்று வேகமாகப்போய் மறைந்துவிட்டான் கந்தசாமி. நல்லவேளை, பார்வதி பார்ப்பதற்குள் அவன் போய்விட்டான். தெருமுனை திரும்பும்போதுகூட அவர்கள் யாராவது தன்னைப் பார்க்கிருர்களா என்று திரும்பிப் பார்த்துக்கொண்டான். அவளைத் தவிர யாரும் அவனைப் பார்க்கவில்லை!

மறுநாள் ஊருக்குப் பயணமானுர்கள் கந்தசாமியும் அவன் தாயாரும்.

"இரமணி, நீ இங்கேயே இரு!" என்று அன்போடழைத்தாள் பார்வதி அம்மாள்.

"எத்தனை நாட்கள் வேண்டுமானலும் வைத்திருங்கள்" என்று சொந்தம் கொண்டாடினள், உருக்மணி. இதற்குள் இரமணி கந்தசாமிக்கு ஒரு சந்தோஷச் செய்தி கொடுத்தாள். "அண்ணு! அக்காவிற்கு நீங்கள் எழுதிய கட்டுரைகளைப்படிக்கவேண்டுமாம்!" என்று நாலுபேர் நடுவே போட்டுடைத்தாள். கந்தசாமிக்கு ஒரு பக்கம் எல்லையில்லா ஆனந்தம்; ஒரு பக்கம் வெட்கம். "கழகப் பத்திரிகைகளைப் பார்க்கச் சொல்" என்று கூறிக்கொண்டே வெளியே போய்விட்டான்.

சென்னைக்கு வந்த பிறகுதான் கந்தசாமிக்குப் பழைய உலகம் ஞாபகம் வந்தது.

"என்னப்பா, கந்தசாமி! எங்கே நாலு நாளாய் ஆளைக் காணோம்?'' என்றனர் கழகத் தோழர்கள்.

"ஒன்றுவிட்ட தம்பிக்குத் திருமணம். போய்வந்தேன்!'' என்றான், திருவாரூர் தையலின் சுந்தர ரூபத்தை நினைத்துக்கொண்டே.

"திருமணமா...? என்ன வகையான திருமணம்?''

"சடங்குகளோடுதான்... அவர்கள் பெரிய வைதீகம்.''

"இப்படிப்பட்ட திருமணங்களைப் பகிஷ்கரிக்கணும். அப்போதுதான் இவைகள் ஒழியும்!'' என்றான் ஒரு தோழன்.

"நான்கூட என் தந்தையிடம் கூறினேன். அவர் ஒத்துக்கொள்ளவில்லை. பிறர்வீட்டுக் காரியங்களில் நாம் எப்படி தலையிடுவது(?) என்றார்.'' என்றான் கந்தசாமி.

"சரி, பிறர் வீட்டுக் காரியங்கள் போனால் போகிறது. நம்முடைய தோழர்கள்வரை நாம் பேசுவோம். நம்முடைய தோழர்கள் வீடுகளில் அது நடக்கவேகூடாது. அப்படி நடந்தால் அங்கே சென்று நாம் 'சத்யாக்ரகம்' செய்யவேண்டும்!'' என்றான் ஒரு தோழன்.

அதற்குள் கந்தசாமி, "அந்த அவசியம் வராதப்பா. நம்மில் யாரும் கோழைகளல்ல!'' என்று வீரம் பேசினான்.

அன்றிரவே கந்தசாமியின் வீரத்திற்குப்பரிசோதனைவந்தது. வீட்டிற்குச் சென்றவுடன் அவன் தந்தை பேச்சைத் துவக்கினார்.

"நாம் கேட்டு அவர்கள் என்ன சொல்லப் போகிறார்கள் என்பது அப்புறமாபார்த்துக்கொள்வோம்; முதலில் உனக்கு இந்தப் பெண் விருப்பமா?'' என்று வெளிப்படையான கேள்வியைக் கேட்டார் சோமசுந்தரம்.

கந்தசாமி புன்முறுவலையே பதிலாகக் கொடுத்தான். "எதுவும் பரிட்சை முடியட்டுமப்பா! அதோடு அவர்கள் நம் முறைப்படிதானே திருமணம் செய்து கொடுப்பார்கள்?'' என்று சாதாரணமாக ஒரு கேள்வி கேட்டான். அதற்கு அவன் தந்தை கூறிய பதில்தான் அவனைக் குழப்பத்தில் தள்ளியது.

"திருமணம் பரிட்சை முடிந்து ஜூன் மாதம்தான். ஆனால் திருமணமுறை எப்படி இருக்கும் என்று நாம் எப்படி முடிவு கூறுவது? அது அவர்களுக்கு விருப்பமானால் போச்சு, இல்லையேல்...''

"இல்லையேல்......ஒரு மண்ணும் வேண்டாம்!'' என்று கோபமாகக் கூறிவிட்டு தன் அறைக்கு ஓடிவிட்டான் கந்தசாமி. அந்த நிமிடம் முதல்தான் அவனுடைய மனப் போராட்டம் ஆரம்பமாகியது.

தங்களுடைய எண்ணத்தை இலேசாகத் தெரிவித்து ஒரு கடிதம் எழுதினார் சோமசுந்தரம், தேவராஜருக்கு.

ஊருக்குப் பெரிய மனிதன், கோயில் தர்மகர்த்தா, பாங்க் டைரக்டர், கவுன்சிலர், இவர் வீட்டிலே சு. ம. திருமணமா? அதைச் சிந்திக்கவே முடியவில்லை, தேவராச முதலியாரால். பார்வதி அம்மாளுக்குக்கோபமாக வந்தது. "என் பெண்ணைத் திருட்டுத்தனமாகவா கல்யாணம் செய்து கொடுக்கிறேன், ரிஜிஸ்டர் திருமணம் செய்ய?'' என்று குதித்தாள்.

'பிறகு பேசிக்கொள்ளலாம்' என்று பொதுவாக எழுதிப்போட்டார் தேவராசர்.

பதிலைக்கண்ட சோமசுந்தரம் வருத்தப்படவில்லை, அவர் எதிர்பார்த்த பதில்தான். ஆனால் இந்தச் சர்ச்சை தெரியாத உருக்மணிக்கு கோபம் அசாத்தியமாக வந்தது. 'என் பிள்ளைக்கு எப்பொழுதுதான் கல்யாணமோ...?' என்று தலையிலே கைவைத்து அழவே ஆரம்பித்துவிட்டாள்.

மாடியிலே படித்துக்கொண்டிருந்த கந்தசாமிக்கு மனம் எதிலும் நாடவில்லை.

"அந்த அழகியை மறந்து எப்படி வாழ்வது?'' என்று பல தடவை தன்னையே கேட்டுக்கொண்டான்.

"அவர் கூறுவதும் சரிதானம்மா! இதோபார் இந்தப்பத்திரிகையில் எழுதி இருப்பதை......'' என்று வாரந் தவறாமல் கழக பத்திரிகைகளை வாங்கிப் படிக்க ஆரம்பித்தஇலட்சுமி தன்தாய்க்கு ஓர்திருத்தப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தாள். கந்தசாமியின் மீது கண்டதும் காதல்கொண்டுவிட்டாள் அவள். ஆகவே அவன் எவ்வழியோ அவ்வழியே தானும் செல்வது என்று முடிவு செய்துவிட்டாள். எப்படியும் தன் தாயைக் சரிசெய்து பின் தந்தையையும் சம்மதிக்க வைத்துச் சோமசுந்தரத்தின் மருமகளாவது என்ற திட்டத்துடன் வேலை செய்ய ஆரம்பித்தாள். அதற்கு முதல் படிக்கட்டாகக் கழகப் பத்திரிகைகளை வீட்டிற்கு வரவழைக்க ஏற்பாடுசெய்தாள். கழக மாதர்சங்கத்தலைவிகளை வீட்டிற்கு அவ்வப்போது வரவழைத்தாள். சுமார் மூன்று மாதங்களுக்கெல்லாம் கழக இலட்சியங்களையும் கொள்கைகளையும் அறிந்ததோடன்றி அவைகளில் ஆழ்ந்த பற்றும் கொண்டுவிட்டாள். தன் பெயரையே வடிவழகி என்று மாற்றிக்கொண்டாள். சந்தர்ப்பம் பார்த்து அப்பாவைச் சரி செய்து இந்தத் திருமணத்தை முடிக்கத் திட்டமிட்ட வண்ணமிருந்தாள்.

இலட்சுமி, வடிவழகியாகிய— இதே நேரத்திலே சென்னையிலேயும் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருந்தன. ஆண்டுத் தேர்வுக்கு மும்முரமாகப் படிக்க ஆரம்பித்த கந்தசாமி கழகக் கட்டிடத்திற்குத் தினம் போவதை நிறுத்திக்கொண்டான். படித்த நேரம் போக மீதி நேரத்தில் இலட்சுமியைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தான்.

போன ஆண்டு ஆவடி காங்கிரசுக்கு வந்து போனாளே அமிர்தம், அவள்கூட அழகாகத்தான் இருந்தாள். நல்லசிவப்பு, ஒல்லியான உடல்தான் — இருந்தாலும் இலட்சுமிக்கு இருக்கும் கவர்ச்சி அவளிடம் இல்லையே. இலட்சுமியின் கண் ஒளி வேறு எவளுக்கு இருக்கிறது? காலேஜில் தமிழ் வகுப்பிற்கு வந்து போகிறாளே கனகம், அவள்கூட நல்ல அழகுதான், பார்த்தால் சிரிக்கிறாள், இருந்தாலும் ஒரே குள்ளம். கன்னம் பூராவும் பருக்கள்! இலட்சுமியின் கன்னம் 'மாம்பழக் கன்னம்' இப்போ பரமுவுக்குக் கல்யாணமானதை இவளுக்குப் பக்கத்திலே நிற்கவைத்தால் 'பரவாயில்லே' என்றுகூட அவளைச் சொல்ல முடியாது. சரியான உயரம், மாநிறமானாலும் கவர்ச்சியான உடல். சிரித்தால் கன்னத்தில் விழும் குழிகள். கொவ்வை இதழ்கள். அதனுள்ளே முத்து முத்தான பற்கள். ஒற்றை மூக்குத்தி, மையிட்ட கண்கள். அவைகள் வீசும் ஒளி...அப்பப்பா...!''

[ அடுத்த இதழில் முடியும் ]

# அரசியல் மேதை அரிஸ்டாடில்

[கி. மு. 322—364]

அரசியல் விஞ்ஞானத்தின் தலை சிறந்த ஆசிரியர் அல்லது தந்தை என்று அழைக்கப்படுபவர்தான் அரிஸ்டாடில் என்னும் கிரேக்க மேதை. அவருடைய அரசியல் நூல்களைக் கற்றுத் துறை போகியவர்களுக்கும் அவருடைய சீரிய கருத்துக் கருவூலத்தால் கவரப்பட்ட பின்சந்ததியார்களுக்கும், அவருக்கு அளிக்கப்பட்டுள்ள பட்டம் எவ்வளவு பொருத்தமுடையது என்பது நன்கு புலனாகும். அவருடைய விவாதங்கள் விரிந்து பரந்தவை. அவருடைய பாகுபடுத்தப்பட்ட ஆராய்ச்சிமுறை வரையறுக்கப்பட்டதொன்றாகும். அவருடைய விளக்கங்கள் ஆழமும் செறிவும் மிக்கவை. அவரின் திரண்ட அறிவு முதிர்ச்சியை அவர், தனது சமகால அரசாங்கங்களைப் பற்றித் தீட்டியுள்ள நூல்களின் வாயிலாகவும், அவருடைய வரலாறு பற்றிய பரந்த அறிவின் மூலமும் நன்கு உணரலாம். பதின் மூன்றாம் நூற்றாண்டில் அவருடைய நூல்களை மக்கள் ஆர்வத்துடன் படிக்க முனைந்தபோதுதான், அவரின் கருத்துக்களின் அருமை பெருமையும், அக்கருத்துக்களைச் செயல்படுத்துதற்கு அவர் குறிப்பிட்டுள்ள முறைகளின் மேன்மையும் உலகுக்குப் புலப்படலாயின.

பிளேட்டோவின் காலத்தில் வாழ்ந்தவர்தான் அரிஸ்டாடில் என்றாலும், பிளேட்டோவைக் காட்டிலும் வயதில் இளையவர் அவர். திரேஸ் நாட்டில் 'ஸ்டபிரா' என்னுமிடத்தில் அரிஸ்டாடில் தோன்றினார். அப்பொழுது மாசிடோனியாவின் அரசனாகத் திகழ்ந்த இரண்டாவது அமிண்டாஸ் என்பவனிடம் மருத்துவராக அரிஸ்டாடிலின் தந்தை வேலை பார்த்து வந்தார். அரிஸ்டாடில் தனது இளமைப் பருவத்திலேயே ஏதன்ஸ் நகருக்கு வந்து, சுமார் இருபதாண்டுகள் பிளேட்டோவின் மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். பின்னர், ஆசியா மைனரில் "அடர்னியாஸ்" நாட்டு இளவரசனான "ஹெர்மியாஸ்" என்பாரின் அரண்மனையில் வேலை பார்த்து வந்தார். ஹெர்மியாஸ் இளவரசனின் கொடுங்கோலாட்சி காரணமாக எழுந்த புரட்சியின் விளைவாக, சின்னாட்களில் அவர் அந்நாட்டைவிட்டு ஓடிவந்துவிட்டார். பின்னர் அவர் பிலிப் மன்னனால் மாசிடோனியக் கோர்ட்டுக்கு அழைக்கப்பட்டு, இளைய அலெக்சாண்டரின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சின்னாட்கள் மாவீரன் அலெக்சாண்டரின் ஆசிரியராகப் பணியாற்றியபின்,

**கோதண்டராமன்**

அலெக்சாண்டர் மாசிடோனியாவின் மன்னனாக அரியணை ஏறினார். அரிஸ்டாடிலும் மாசிடோனியாவைவிட்டு வெளியேறி ஏதன்ஸ் நகரத்துக்கு வந்தார். அந்நகரில் அவர் "லிசியம்" என்றழைக்கப்படும் விளையாட்டு மைதானமொன்றில் பள்ளி ஒன்று நடத்தினார். இந்தப்பள்ளியில் தோற்றுவிக்கப்பட்ட "சிந்தனை முறை" பெரிபேடடிக் என்றழைக்கப்படுவதாயிற்று. இப்பள்ளிக்கு "பெரிபேடடிக்" என்ற பெயர், அரிஸ்டாடில் அப்பள்ளிக்கு நடந்துசென்று மாணவர்களைச் சந்தித்ததன் காரணமாக எழுந்தது என்று ஒருசாரார் கூறுவர். மற்றொரு சாரார், அவர் தன்னுடைய தத்துவ விரிவுரைகளைச் சுற்றிக்கொண்டே நிகழ்த்தியதன் காரணமாக அப்பள்ளிக்கு அப்பெயர் வந்ததென்று கூறுவர்.

பிளேட்டோவைப் போன்றே அரிஸ்டாடிலும் கிரேக்க நாட்டின் ஒரு அரசுக்கும் மற்றொன்றிற்குமிடையே ஆதிக்கப்போட்டி காரணமாக நிகழ்ந்த போர்களையும், அக்காலத்து விளைந்த அரசியல் குழப்பங்களையும் நேரடியாகக் கண்டறிந்தார். மாசிடோனிய சாம்ராஜ்ய விரிவைக் காண நேரிட்ட அதே நேரத்திலேயே, அவர் துரிதமாக உருவாகிக்கொண்டிருந்த மகத்தான மனித சக்தியைக் காணும் ஓர் அரிய வாய்ப்பினைப் பெற்றிருந்தார். ஆனால் அவர் காண நேரிட்ட அந்த மகத்தான மனித சக்தி, அவரின் அரசியல் கருத்துக்களைப் பாதிக்கவில்லை. காரணம், அவர் அரசியல்பற்றிய தனது சிந்தனைப் பறவைகளை, சிறு அரசியல் வகுப்புக்களிடையில் மட்டுமே பறக்கவிட்டார்.

அரிஸ்டாடிலின் எழுத்துக்கள்- விவாத நூல், இயற்கையையும் எண்ணங்களையும் பற்றி அறிவிக்கும் நூல், கணிதம், பௌதிக நூல், பொது விஞ்ஞானம், சொற்பொழிவு நூல், கவிதை நூல், நீதி நூல், அரசியல் நூல்-இவைகளை உள்ளிட்ட பல துறைகளையும் கவர்ந்துள்ளது என்னலாம். அரிஸ்டாடில் மேற்கொண்ட அரசியல் கருத்துக்களின் அடிப்படைக்கும், அவரது ஆசிரியர் பிளேடோ மேற்கொண்ட அடிப்படைக்கும் உள்ள ஒற்றுமைவேற்றுமைகளைப் பற்றி, அரசியல் தத்துவ வல்லுநர்களிடையில் கருத்து வேற்றுமைகள் இல்லாமலில்லை. சுதந்திரமானதும் அப்பழுக்கற்றதுமான உண்மைத் தத்துவங்கள், பொதுப் பண்புகளில் இருந்து தோன்றியவைதான் என்னும் பிளேட்டோவின் தத்துவத்தை அரிஸ்டாடில் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, அந்தத் தத்துவத்தை அவர் கண்டித்தார். பிளேட்டோவின் கருத்திற்கு மாறுபட்ட அவருடைய கருத்து என்னவென்றால், மேற்கூறிய பொதுப் பண்புகள்

அல்லது பொதுக்கூறுகள், புலன்களால் உணரக்கூடிய, பொருட்களின் துணைக் கருவிகள் என்ற மட்டில்தான் உண்மையே தவிர, உறுதியாக உண்மையான பொருள்கள், புலன்களால் நுகரத்தக்க பொருட்களேயன்றி, வேறில்லை என்பதாகும். இந்தத் தத்துவமே, புலன் நுகர்ச்சியின் அடிப்படையில் நடத்தும் தத்துவ ஆராய்ச்சிக்கு அஸ்திவாரமாக மிளிர்கிறது என்று அவர் மேலும் கருதினர். பிளேடோவின் அரசியல் தத்துவங்களுக்கும், அரிஸ்டாடிலின் அரசியல் தத்துவங்களுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளை — பிளவுகளை — சரிப்படுத்த இயலுமா இயலாதா என்ற பிரச்னை ஒருபுறமிருக்க, அந்தத் தத்துவங்களைச் செயற்படுத்த இவ்விருவரும் கூறியுள்ள முறைகளைப் பொறுத்த மட்டில் மிகவும் வேறுபாடுகள் உள்ளன என்பது யாவரும் ஒப்பமுடிந்ததோர் உண்மையாகும். இந்த முறை வேறுபாடுகள், அவர்கள் எழுதிச் சென்ற அரசியல் நூல்களில் இருந்து தெளிவாக உணரப்படும். அரிஸ்டாடிலின் அரசியல் ஆராய்ச்சி சுருக்கமான — ஆனல் நடைமுறைக்கு மிகவும் ஏற்றதான ஒரு ஆராய்ச்சி என்ருல் அது மிகையாகாது. அவருடைய அரசியல் நூல்களில், பளிச்சிட்டுப் பளிங்குபோல் அறிவொளி வீசும் கவித்துவ நடையும் கவினும், கற்பவரின் இதயத்தை அள்ளிக் கொள்ளை கொள்ளும் அருந்திறனும் உடையன என்பது தேற்றும். தனது தெள்ளிய சிந்தனசக்தி மூலம் கண்டறிந்த பல அரும்பெரும் உண்மைகளை, அவர் வரலாற்றுச் சான்றுகளோடு குழைத்துத் தந்துள்ளதை நோக்குமிடத்து, அவருடைய சான்ருண்மையின் அகலமும் ஆழமும் தெற்றென நமக்கு விளங்கா நிற்கும். அரிஸ்டாடிலின் கருத்துப்படி, அரசியல் என்பது, தத்துவம், அறநெறி இவைகளோடு சிறிதும் கலவாமல் தனித்து, அவைகளினின்றும் வேறுபட்ட—தெளிவான — அரசு பற்றிய ஒருவரையறுக்கப்பட்ட விஞ்ஞானமாகும்.

அரிஸ்டாடிலின் பெரும்பான்மை நூல்கள் நமக்கு முழு வடிவத்திலோ, அல்லது தொடர்ச்சியும் கோர்வையும் உடையதாகவோ கிடைக்கவில்லை. மாருக அவை சிதறுண்ட துண்டுகளாகவே நமக்குக் கிடைத்துள்ளன. இதனல், பலவாறு திரட்டப்பட்ட அரிஸ்டாடிலின் நூல்கள், அவரது ஆசிரியர் அல்லது மாணவர்களின் குறிப்புப் புத்தகங்களிலிருந்தே ஒருவேளை தொகுக்கப்பட்டிருக்குமோ என்று எண்ணுவதற்கும் இடமுண்டு. "அரசியல்" என்ற தலைப்பிட்ட அவரது நூலும், வேறு பல நூல்களும், ஒருமுறை கூறப்பட்ட கருத்துக்களையே பல இடங்களில் திரும்பவும் தாங்கி நிற்பதை நாம் காண்கிறோம். "அரசியல்" என்ற அவரது நூலின் எந்தப் பகுதியிலும், அவர் அளித்துச் சென்ற அரிய கருத்துக்கள் தொடர்ச்சி உடையனவாகவோ. தர்க்கக் கோர்வை கொண்டதாகவோ காணப்படவில்லை. அரசியல் தத்துவத்தைப் பற்றி அவர் கொண்டிருந்த அடிப்படைக் கருத்துக்களை அவர் எழுதிய கீழ்க்கண்ட நூல்கள் தெள்ளிதின் விளக்கா நிற்கும். அவையாவன:- "அரசின் தோற்றமும் முடிவும்" "குடியிருப்பு உரிமையின் விளக்கம்" "உயர்ந்த அரசியல் அதிகாரத்தின் இருப்பிடம்" "பல்வகை அரசுகள்" அரசாங்கத்தின் பல்வேறு கூறுகள் அல்லது இலாகாக்கள், "அடிமை வாழ்வின் அவசியம்" "பொதுச் சொத்து அல்லது தனிச்சொத்து உரிமையினல் விளையும் நலன்கள்" "தனிச் சொத்தின் அளவைக் குறைத்தல் அல்லது வரம்பு செய்தல்" "நல்லாட்சியில் நிலவவேண்டிய சூழ்நிலை" "அரசாங்கத்தின் அடிப்படையில் மாற்றங்கள் நிகழ்வதன் காரணங்கள்" "நிலையான அரசாங்கம் அமைவதற்கு வழி" என்பனவாம்.

பாமர மக்களும் புரிந்துகொள்ளும் மிக எளிமையான உவமைகளின் மூலம் உயர்ந்த அரசியல் கருத்துக்களை, அரிஸ்டாடில் தனது நூல்களில் நன்கு விளக்கியுள்ளார். பெரும்பான்மையான, மக்கள் பிரதிநிதிகளால் நடத்தப்படும் மக்களாட்சியின் மாண்பினைப் பற்றி அவர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்:—

"பெரும்பான்மை மக்கள், தனிப்பட்ட ஒரு அரசியல் அறிஞனை விட அறிவிற் சிறிந்தவர்களாக இருப்பார்கள் என்ற காரணத்துக்காகவே மக்களாட்சியில், பெரும்பான்மையினருக்கு ஆட்சிப் பொறுப்பு தரப்படுகிறது என்ற கூற்றுச் சரியானதல்ல. சிற்சில சமயங்களில் தனி மனிதன் ஒருவன், எண்ணிறந்த மனிதர்களின் அறிவையெல்லாம் கூட்டினலும் பெறக்கூடிய அறிவைவிட மிக்க அறிவு கொண்டவனக மிளிர்கிருன். ஆனல் ஒரு நாட்டு அரசியலில் தனி நபரால் நடத்தப்படும் முடியாட்சியில் காணப்படுகின்ற அளவுக்கு, குடியாட்சியில் குறைகள் இருப்பதில்லை. ஒரு சிறு குவளையில் உள்ள நீரில் சிறிதளவு தூசு படிந்தால், அது குவளையிலுள்ள நீர் முழுவதையும் பாழ்படுத்திவிடுகிறது. ஆனல் கடல் நீரில் எவ்வளவுதான் அசுத்தம் கலக்கப்பட்டாலும், அது நீரின் தன்மையைப் பாதிப்பதில்லை. இன்னும் சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானல், தனி நபர் ஒருவர் தனது தனிப்பட்ட பொருள் கொண்டு நடத்தும் விருந்தைக் காட்டிலும், பல பேர்களின்

(12-ம் பக்கம் பார்க்க)

## நாத மேதையின் மறைவு

காஞ்சீபுரம் பிரபல நாத சுர வித்வான் விசுவநாதன் அவர்கள் சின்னுட்கள் நோய்வாய்ப்பட்டிருந்து தமது 65-வது வயதில் (15-2-58) இயற்கை எய்தினர் என்ற செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

கடந்த முப்பது ஆண்டுகளாகவே நாத சுர மேதையாக இருந்த இவரின் திறமை குடத்திலிட்ட விளக்குப் போல் காஞ்சிபுரத்தோடு நின்றுவிட்டதை எண்ணும்போது, இசையுலகம் இவரைத் தக்க முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டதென்றே கருதத் தோன்றுகிறது.

மறைந்த வித்வான் விசுவநாதன் அவர்கள் எவருடனும் நல்ல முறையில் பழகும் பண்பு பெற்று விளங்கினர். தன்னை ஒரு பெரிய மேதை என்று காட்டிக்கொள்ள அவர் எப்போதுமே விரும்பியதில்லை. ஆழ்ந்து அடங்கிய அருங்குணம் பெற்ற இவரின் மறைவால் வருந்தும் அவரது குடும்பத்தார்களுக்கு நமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிறோம். வாழ்க அவர் புகழ்.

வரலாற்று நாடகம்

# விழிப்பு

—[மலர்மன்னன்]—

**நிலை :**

'சுதந்திரமா, அடிமை வாழ்வா' என்பதைத் தங்களுக்குத் தாங்களே நிர்ணயித்துக்கொண்டாக வேண்டிய நிலையில் அமெரிக்க மக்கள் இருந்த சமயம். பிரிட்டிஷ் பேரரசின் பிரும்மாண்டமான கப்பற் படை திரண்டெழுந்து வந்து அமெரிக்கக்கடற்கரையோரங்களில் நின்றவண்ணமிருந்த காலம். எந்தத் தருணத்தில் அவை தாக்க முற்படும் என்று தெரியாதவர்களாய் மக்கள் மனம் புழுங்கியபடி வீட்டினுள் அடைந்து கிடக்கின்றனர். சூறாவளி வீசுவதற்கு முன் இருக்கும் நிலையை அவர்களிடையே நிலவும் பயங்கர அமைதி உணர்த்துகிறது. மெல்ல மெல்ல இருள் படர்ந்து, மாலை நேரத்துப் பொன் வெயிலை விழுங்குகின்றது.

**இடமும், இருப்போரும் :**

கடலோரத்துச் சிற்றூர்களுள் ஒன்றான சார்லஸ் டவுனுக்கு அருகாமையில், சுற்றிலும் நீர் சூழ்ந்திருக்க, தனித்திட்டாகக் காட்சியளிக்கும் ஓர் சிறு குன்று; குன்றின் உச்சியில் பாழடைந்த கோயிலொன்று வானளாவி நிற்கின்றது. குன்றின் அடிவாரத்தில் துடிப்புள்ள அமெரிக்க இளைஞர்களிருவர் நின்றிருக்கின்றனர். அவர்களிலொருவன்தான், விடுதலை வேட்கை நிரம்பப் பெற்றவனான பால்ரிவியர்; மற்றவன், அவனது ஆருயிர்த் தோழருள் ஒருவன்.

*

பால்ரிவியர்:- சற்றே அயர்ந்துவிட்டாலும் அமெரிக்க நிலம் அடிமை நிலமாகிவிடும் என்பதை மறந்துவிடாதே, நண்பா! இன்றிரவின் உறக்கத்திற்கு இப்போதே விடை கொடுத்துவிடு.....,

நண்பன்:- வாழ்வா தாழ்வா என்ற போராட்டத்தில் தாயகம் ஈடுபட்டிருக்கின்ற தருணத்தில் உறக்கம் ஒரு கேடா, பால்ரிவியர்? உறங்கமாட்டேன் நண்பா, நிச்சயம் உறங்கிவிட மாட்டேன்.

பால்:- நான் கூறியதனைத்தும் உனக்கு நன்கு நினைவிருக்கிறதல்லவா, நண்பா? ஓங்கி நிற்கும் இந்தக் கோயிற் கோபுரத்தின் மீதேறி, மேன்மாடத்தில் ஒளிந்துகொள். கடலைநோக்கியே கண்களைப் பதித்தபடி இரு; அமெரிக்க அன்னையின் கரங்களில் விலங்கேற்றிவிடவேண்டுமென்ற பேராசையுடன் வந்து குழுமியிருக்கும் பிரிட்டிஷ் பட்டாளம் கப்பலை விட்டிறங்கி, சிறுசிறு கலங்களைச் செலுத்திக் கொண்டு நிலத்தைநோக்கி வரத் துவங்கினால், நீ உடனே கொழுந்துவிட்டெரியும் தீப்பந்தத்தை அசைத்து, அக்கரையில் அலைந்து கொண்டிருக்கும் எனக்கு அறிவிப்புத் தரவேண்டும். புரிந்ததா, நண்பனே?

நண்:- புரிந்தது, பால்ரிவியர்; நீ மற்ற ஏற்பாடுகளைக் கவனி.

பால்:- நண்பா, கோவில் கோபுரத்தில் இருள் நீக்கமற நிறைந்திருக்கும். இருட்டின் ஆதரவில் வாழ்ந்து வரும் நச்சரவங்களைப் போன்ற கொடிய உயிரினங்கள் அங்கே ஏராளம். எனவே நண்பா, எச்சரிக்கையாக இரு.

நண்:- நச்சுப் பாம்புகளுக்கு அச்சப்பட்டுக்கொண்டிருந்தால் நமையாள வந்துள்ளோரை விரட்டுவது எப்படி, பால்ரிவியர்? நீ போ, நான் பார்த்துக் கொள்கிறேன்.

[பால்ரிவியர் நண்பனிடம் விடை பெற்றுக்கொண்டு விரைகிறான்.]

*

(கடலலைகள் மோதி மீளும் மணற்பரப்பு; இருட்டின் இறுக்கமான அணைப்பில் வையகம் சிக்கித் திணறிக் கொண்டிருக்கிறது. நிலவில்லா வானத்தில் சிதறிக் கிடக்கும் விண்மீன்கள் மின்மினிப் பூச்சிகளைப்போல் மங்கிய ஒளியை உமிழ்ந்துகொண்டு இருக்கின்றன. குன்றின் உச்சியில் விளங்கும் கோவிலின் கோபுரத்தையே நோக்கியபடி அமைதியற்ற உள்ளத்தோடு தன்னந்தனியனாக அலைந்துகொண்டிருக்கிறான் பால்ரிவியர். அவனுக்குத் துணையாக சற்றுத் தொலைவில் வெண்ணிறப் புரவியொன்று உடலைச் சிலிர்த்துக்கொண்டு நிற்கிறது.)

பால்:- (தனக்குள்) ஏன் இன்னும் தீச்சுடர் தெரியவில்லை? பிரிட்டிஷ் படைகள் இன்றிரவு நாட்டினுள் நுழையப் போவதாக வந்த தகவல் வெறும் பொய்யோ? அல்லது......கோபுரத்தினுச்சியில் ஒளிந்திருக்கும் நண்பன் உறங்கிவிட்டிருப்பானோ...? இருக்காது........ பொறுப்புணர்ச்சி மிக்கவனான என்நண்பன் ஒருபோதும் உறக்கத்தில் மூழ்கிவிடமாட்டான்; (சுற்றிலும் கண்களைச் செலுத்தியபடி) இருளே, ஏன் இப்படி மண்டிக்கிடக்கின்றாய்? அமெரிக்க நிலத்தின் வருங்காலத்தைத்தான் உணர்த்துகின்றாயோ, ஒருவேளை? முடியாது; கவிந்திருக்கும் இருட்டே, எங்கள் தாயகத்தின் எதிர்காலம் இருண்டுபோக ஒருநாளும் நாங்கள் அனுமதிக்க மாட்டோம்; எங்கள் உதிரத்தால் எங்களது நிலத்தைச் சிவப்படையச் செய்வோமேயன்றி, ஒருக்காலும் உனது கருநிறம் படரவிடமாட்டோம்! (அண்ணாந்து நோக்கி) மங்கிய நட்சத்திரங்களே, எதற்காகப் பெருமிதம் கொண்டு தளுக்கி மினுக்குகிறீர்கள்? ஆட்சித்திற

னும், அரசியலறிவும் கொண்டோர் இல்லாத தருணத்தில், நிர்வாகத் திறமையற்ற பேதையர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பது போலத்தான் நிலவற்ற நேரத்தில் நீங்கள் வானத்தை ஆக்ரமித்துக் கொண்டிருக்கிறீர்கள்!

[திடீரென்று குன்றின் உச்சியில் தீப்பந்தத்தின் ஒளி அசைவது தெரிகிறது. அது கண்ட பால்ரிவியர் துள்ளிப் பாய்ந்தோடிப் புரவியின் மேல் தாவுகிறான்.]

பால்:- (புரவியிடம்,) என் துணையே, விழிப்பூட்டி விடுதலை வேட்கையூட்டும் பணியில் ஈடுபட்டிருக்கும் எனக்கு, உன்னாலான உதவியைச் செய்திடத் தயங்கிவிடாதே!

[புரவி மின்னல் வேகத்தில் ஊருக்குள் நுழைந்து, ஒவ்வொரு தெருவிலும் புகுந்து புறப்படுகின்றது.]

பால்:- (உரத்த குரலில்) உறங்கிக் கொண்டிருக்கும் என்னருமைத் தோழர்காள், எழுந்திருங்கள்! அமெரிக்க அன்னையின் அரும் புதல்வர்களே, கண் விழியுங்கள்! உடலை நடுக்கும் குளிருக்குப் பயந்து வீட்டினுள் ஒடுங்கிக்கொண்டு விடாதீர்கள்! என்றென்றும் ஒடுங்கிக்கொண்டிருந்தாக வேண்டிய நிலை பிறந்துவிடும்! இத்தருணம் நீங்கள் உறக்கத்திலிருந்து விடுபடாவிடில் நிரந்தரத் தூக்கத்தில்ஆழ்த்தப்பட்டுவிடுவீர்கள்; விழித்துக்கொள்ளுங்கள்; இல்லையேல் என்றுமே விழித்துக்கொள்ள இயலாத நிலை ஏற்பட்டுவிடும்! சார்லஸ் டவுன் வாசிகளே, அமெரிக்க அன்னை இதுநாள்வரை நமக்குச் செய்து வந்த நன்மைகளை யெல்லாம் எண்ணிப் பாருங்கள்; அவள் நம் வயிற்றுக் கவலையை அகற்றினாள்; இன்ப வாழ்வுக்கான வசதிகள் செய்து தந்தாள்; இன்று அவள் மாற்றார் வசமாகும் நிலையிலிருப்பதை எண்ணிப் பாருங்கள்; இந்த இக்கட்டான கட்டத்திலிருந்து அவளை நாம் விடுவிப்போமென்று அவள் நம்பியிருக்கிறாள்; அவளது நம்பிக்கையில் மண் தூவி விடாதீர்கள். உலகம் உங்களை நோக்கி ஏளனம் புரியும்; நாளைய சமுதாயம் உங்களைத் துரோகிகளென்று இகழும்!

[இல்லந்தோறும் உறங்கிக் கிடந்த மக்களெல்லோரும் விழிப்பெய்தி, புத்துணர்வடைந்தவர்களாய், வெளியே வந்து கூடுகின்றனர்.]

மக்கள் குழாம்;- எங்களை விழிப்படையச் செய்து விடுதலை எழுச்சி யூட்டிய வீரனே! ஆங்கிலப் படைகளை எதிர்த்திட நாங்கள் ஆயத்தம்; அண்டை ஊர்கட்கும் சென்று உறங்குவோரை யெல்லாம் விழித்தெழச் செய்வாயாக! அன்னியரை விரட்ட அவர்களையும் ஆயத்தமாக்குவாயாக!

[மக்கள் குழாம் பேராரவாரத்தோடு அவனை வழியனுப்புகிறது.]

*

(அண்டையிலுள்ள ஊரான மெட்போர்டுக்குள் பால்ரிவியர் நுழைகிறான். பயங்கர அமைதியினைப் பிளந்துகொண்டுவரும் குளம்போசை கேட்டு கூட்டினுள் ஒடுங்கிக்கிடக்கும் பறவையினங்கள் கீச்சிட்டுப் பறக்கின்றன. நடுத்தெருவில் தூங்கி வழியும் நாய்கள் ஓலமிட்டவாறு துள்ளியோடுகின்றன.]

பால்:- உறங்குவோரே, எழுந்திருங்கள்! ஆங்கிலப் படைகள் நம்மை அடிமைப் படுத்திட விரைந்து வருகின்றன; அமெரிக்க நிலம் மயான நிலமானாலும் ஆகுமேயன்றி, அடிமை நிலமாக ஒருநாளும் ஆகாதென்பதை அவர்களுக்கு உணர்த்துங்கள்! உறக்கத்தை அகற்றுங்கள், கண் விழியுங்கள்!

[ஊர் மக்கள் உறக்கம் கலைந்தவர்களாய் வெளிப்புறம் வருகின்றனர். வெண் புரவி மீது படபடப்புடன் வீற்றிருக்கும் பால்ரிவியரை வியப்புடன் நோக்குகின்றனர்.]

கூட்டத்தினருள் ஒருவன்:- யார், அது? என்ன நேர்ந்தது?

பால்:- கடலோரம் இருந்த கப்பல்களினின்று ஆங்கிலப்படைகள் கரைநோக்கி வருகின்றன. நட்ட நடுநிசியில் திருட்டுத்தனமாக நுழைய வரும் அவர்களை விரட்டித் துரத்த ஆயத்தமாகுங்கள்!

வேறொருவன்:- ஏர் கொண்டு நிலம் திருத்தும் எங்களால் போர்புரிவது எங்ஙனம்சாத்தியமாகும்?

பால்:- பயந்து பதுங்கும் பூனையும், அறையினுள் அடைத்து விரட்டினால் சீறிப்பாய்வதை அறியீரோ? "உயிர் வாழவேண்டுமானால் சுதந்திரம் இருக்க வேண்டும்; அந்தச் சுதந்திரத்தைப் பெற உயிரை இழக்கவும் சித்தமாக இருத்தல்வேண்டும்" என்ற உண்மையினை நீங்கள் உணருங்கள். நீங்கள் வாளா இருந்துவிட்டால் அமெரிக்க அன்னை மாற்றாருக்கு அடிமையாகி விடுவாள்; "என்னைக் காத்திடத் திறனற்ற கோழைகளை ஏன் புதல்வர்களாகப் பெற்றெடுத்தேன்?" என்று மனம் நொந்து கண்ணீர் சொரிவாள்; உங்கள் அன்னையின் கண்கள் குளங்களாவதை நீங்கள் விரும்புகிறீர்கள் போலும்! பெற்றவளுக்குத் துரோகமிழைப்பதை எள்ளளவு குற்றமாகவும் நீங்கள் எண்ணவில்லை போலும்!

மக்கள்:- (வீறுகொண்டு) இல்லை! இல்லை!! துரோகிகளல்ல, நாங்கள்! அன்னையைக் காப்போம்! ஆருயிர் ஈந்தும் அன்னையைக் காப்போம்!

பால்:- வருகிறேன், மெட்போர்டு மக்களே; பயிர்த்தொழில் புரிவோராயினும் தாயைக் காத்திடப் போர்த்தொழில் புரிந்தாக வேண்டுமென்பதை உணருங்கள்; உங்கள் ஊருக்குப் பெருமையுண்டாகும் வகையில் செயலாற்றுங்கள்!

[பால்ரிவியர் காற்றினும் கடுகி விரைகிறான்.]

*

[லெங்சிங்டன் என்ற ஊரின் எல்லையைப் பால்ரிவியர் அணுகுகிறான். வெகுதூரம் விரைந்து வந்தமையாலும், வெறிபிடித்தவனாய் உரத்த குரலில் கூவிப் பேசியதாலும், அவன் வெகுவாகக் களைப்படைந்து விட்டவனாகக் காணப்படுகிறான். அவனைச் சுமந்துவரும் புரவியும் களைத்துப் போய் நுரை தள்ளியவாறு விரைகின்றது. ஊருக்குள் வந்தடைந்ததும் பால்ரிவியர் மீண்டும் உரத்த குரலில் எழுச்சிக் கீதம் பாடத் துவங்குகின்றான்.]

பால் :- லெங்சிங்டன் குடிமக்களே! உறக்கத்தினின்று விடுபடுங்கள்! ஆங்கிலப் படை நம்மை

அடிமைகொள்ள வந்துவிட்டது; நம்அன்னையின் கரத்திற்கு விலங்கு பூட்டும் எண்ணத்துடன் சார்லஸ் டவுன் கரையினை அணுகிவிட்டது; அமெரிக்க மண்ணில் பிறந்தோரே, அமெரிக்க மண்ணால் பயனடைவோரே! விழித்தெழுங்கள்! பேராசை கொண்டு விரைந்து வரும் அன்னியரை அடியோடு அழித்திடக் கிளம்புங்கள்! ஒரு நாள் உறக்கத்தைத் துறக்க மனமின்றி சுதந்திரத்தைப் பறிகொடுத்து விடாதீர்கள்; எழுந்திருங்கள்; எழுந்திருங்கள்!

[பால்ரிவியரின் வீரவுரை கேட்டு லெங்சிங்டனும் போர்க்கோலம் பூணுகின்றது. பால்ரிவியர் அருகிலுள்ள இதர ஊர்மக்களையும் விழிப்படையச் செய்துவிட்டு இறுதியாகக் கான்கார்டு நகருக்கு விரைகிறான்.]

❋

[கல்லிலும் முள்ளிலும் கடுகி வந்ததால் பால்ரிவியரின் பரந்த நெஞ்சு மேலும் கீழுமாக இரைக்கின்றது. தொண்டை வரண்டு நீர்வேட்கையும் அதிகரிக்கிறது; சோர்வுற்ற புரவி ஓடமாட்டாமல் ஓடுகிறது. ஓடும்போதே கால்கள் தடுமாறிக் கீழே சாய்கின்றது. பால்ரிவியர் குப்புறக் கவிழ்ந்து விழுகிறான். ஆனால் விடுதலை ஆவேசம் கொண்ட அவன் எதையும் பொருட்படுத்தாது மீண்டும் குதிரையை எழுப்பி நிறுத்தி ஏறிக்கொண்டு, கான்கார்டு நகரத்திற்குச் செலுத்துகிறான். உடம்பெங்கும் காயங்களும் புழுதியுமாக—உடைகள் யாவும் வியர்வையில் நனைய — மார்பு படபடக்க, நகருள் நுழைகிறான். களைப்பு மேலீட்டால் பேசும் சக்தியை இழந்தும்கூட மக்களை விழிப்படையச் செய்யும் பொருட்டு உரக்கப் பேசத் துவங்குகிறான, அவன்.]

பால்:- கான் கார்டு நகரத்தாரே! எழுந்திருங்கள்! பிரிட்டிஷ் பட்டாளம் நாட்டினுள் நுழைந்து விட்டது; போரிட ஆயத்தமாகுங்கள்! (தொடர்ந்து பேசுவதற்கு இயலாதவனாய்க் குதிரையினின்று கீழே மயக்கமுற்று விழுகிறான். அவனது போர்ப்பரணி கேட்டுக் கண் விழித்த மக்கள் வெளியே விரைந்து வருகின்றனர். கீழே விழுந்து கிடக்கும் அந்த வீர இளைஞனை ஓர் முதியவர் விரைந்து சென்று தூக்குகின்றார். மயங்கிக் கிடக்கும் பால்ரிவியர் மெல்ல விழிகளைத் திறக்கிறான்.)

பால்:- (மெல்லிய குரலில்) ஆங்கிலப் படைகள் அமெரிக்க நிலத்தில் நுழைந்து விட்டன... ...அன்னியர் பிடியிலிருந்து தாயகத்தை மீட்க ஆயத்தமாகுங்கள்......எனக்கொன்றும் நேர்ந்துவிடவில்லை.....என்னைக் கவனிப்பதில்உங்கள்பொழுதை வீணாக்காதீர்கள்......அயலாரை எதிர்ப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள்......

முதியவர்:- உனதுசுதந்திர வெறியினையும், விடுதலை ஆவேசத்தையும் கண்டே மக்கள் விழிப்புணர்ச்சி எய்திவிட்டார்கள்; அன்னை நாடு அடிமை நாடாகலாகாது என்பதன் பொருட்டு அவர்கள் வீறுகொண்டெழுந்து பொருதுவர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை; விடுதலை வேட்கைமிக்க வீர இளைஞனே, நீ சற்று ஓய்வெடுத்துக் கொள்வாயாக!

[முதியவர் பாசக் கண்களால் அவனை நோக்குகிறார், அவன் மன நிறைவுடன் புன்னகை புரிந்து, சோர்வு மிகுதியால் விழிகளை இமைகளுக்குள் ஆழ்த்திக்கொள்கிறான்.]

❋

பால்ரிவியர் நடுநிசியில் ஊர் ஊராகச் சென்று உறக்கத்தை விரட்டி, விடுதலை யுணர்வை ஊட்டியதால் அமெரிக்க மக்கள் தன்னம்பிக்கையுடன் பொருதி பிரிட்டிஷ் படைகளைப் பின் வாங்கச் செய்தனர். பால்ரிவியர் தந்த விழிப்பு, அமெரிக்க நிலம் அடிமை நிலமாக ஆகிவிடாதவாறு பாதுகாத்தது.

❋ ❋ ❋

குறிப்பு:— கவிஞர் லாங்பெல்லோவின் கவிதையொன்றை ஆதாரமாகக் கொண்டு இது எழுதப்பட்டது.

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

பொருளுதவியோடு நடத்தப்படும் விருந்து பல்லாற்றானும் சிறந்து விளங்குதல் வெளிப்படை.''

மக்களாட்சியை, அறிஞர் அரிஸ்டாடில் மனிதனின் உறுப்புகளோடு ஒப்பிடுகிறார். எவ்வாறு ஒரு மனிதன் இயங்குவதற்கு அவனுடையஒவ்வொரு அங்கமும் உறு துணையாக உள்ளதோ, அவ்வாறே மக்களாட்சியில், ஆள்பவர்கள் ஆளப்படுபவர்கள் இருவருடைய ஒத்துழைப்பும் இன்றியமையாதது என்றும் சுட்டிக் காட்டுகிறார். மனிதனின் இவ்விரு கூறுகளும் உள்ளன என்று அவர் உரைக்கிறார். ஒரு மனிதனின் உள்ளம்தான் அவனுடைய அங்கங்களைத் தனது இச்சைக்குகந்தபடி ஆட்டிப் படைக்கிறது என்று அவர் கூறுகிறார். உலகத்தில் இயற்கையின் படைப்பிலே, ஆண் ஆள்பவனாகவும், பெண் ஆளப்படுபவளாகவும் விளங்குகிறாள் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். மனிதன் ஓர் "அரசிப்பிராணி" என்றும், அவன் ஓர் "சிந்தனைப் பிராணி" என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் வளர்ச்சி என்னும் எழில் மிக்க மாளிகைக்கு, உறுதியான அஸ்திவாரமாக அரிஸ்டாடிலின் நூல்கள் அனைத்தும் அமைந்துள்ளன. அரசியல் உலகுக்குக் கிரேக்கம் அளித்துள்ள மேதைகளில், சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவர் அறிஞர் அரிஸ்டாடில். கிரேக்கப் பேரறிஞர் சாக்ரடிஸ் பிளேடோ இவர்களின் நிரலில் வைத்துப் பாராட்டத் தக்கவர் அரிஸ்டாடில் என்றால் அதுமிகையாகாது. சுருங்கக் கூறின அரிஸ்டாடில், ஈடும் எடுப்புமற்ற ஒரு அரசியல் தத்துவ ஞானி! சிந்தனைச் சிற்பி! இலக்கிய மேதை! அரசியல் வானத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் அறிவு நட்சத்திரம். விரிப்பானேன்? அரசியல் அரிச்சுவடியை ஆக்கித் தந்ததன் காரணமாகத் தனக்கும் தனது தாயகமாகிய கிரேக்க நாட்டிற்கும் அழியாத ஓர் இடத்தைப் பெற்றுவிட்ட அறிஞர் அரிஸ்டாடிலுக்கு, அரசியல் உலகம் என்றும் கடமைபட்டிருக்கிறது.

★

# கோவிந்தா! கோவிந்தா!!

"சார்! பேரை மாத்திவைச்சுக்கறதே, பேஷனு நினைக்கிருங்களே, இப்ப. அன்பழகனும், நெடுஞ்செழியனும், மதியழகனும். ஏன் சார், நம்ப முன்னேர்கள், கிருஷ்ணு ராமான்னு ஏன் பேருவைச்சா தெரியுமோ...ஒரு சாமானை எடுத்துவரச் சொல்றதா வைச்சுக்குங்க. 'கிருஷ்ணு!' அப்படின்னு கூப்பிடுவோம்......'ராமா, காப்பி கொண்டா' 'கோவிந்தா! குடத்தைத் தூக்கு' இப்படிச் சொல்லும்போது அறிந்தோ அறியாமலோ ஈசுவரன் நாமத்தை வாய் ஜபிக்குதேல்லோ. இந்தத் தாத்பரியத்துக்காகத்தான், அந்தப் பேர்களை வைச்சா, புரியுதோ...!!

*

இப்போதும், கேட்கிருேம்.

காய்ச்சியபால் சிறிது நேரத்துக்கொருதரம் தொண்டையில் ஓட, கனத்த சாரீரத்தையும் அதோடு சரீரத்தையும் உயர்த்தியபடி பாடும், புராணப் பிரசங்கிகள், காதும் மூக்குவைத்து, அழகான விளக்கம் அளிக்கிருர்கள்.

ஐயனையும் மெய்யனையும், ஆத்மாக்கள், இப்படியாவது எண்ணினல், மோட்சலோகக் கதவுகள் 'படீரென'த் திறக்கும் என்று எண்ணுகிருர்கள்—பேசுகிருர்கள்.

*

"ஒரு கதை தெரியுமோ? அவன், வேடன்! வில்லையும் அம்பையும் வைத்து வாழ்கிறவன். அவன் வாயிலிருந்து, "ராம் நாமத்தை" வரச்செய்யவேண்டும் என்று ஆசைகொண்டார், ஒரு முனிபுங்கவர். அவனை அழைத்தார். பக்கத்தில் ஒரு மராமரம் நின்றது. "அப்பா வேடா! இது என்ன மரம் சொல்லு?" என்ருர். "போ சாமி! இது தெரியாதா? இது மராமரம்..." என்ருன் வேடன். "எங்கே இன்னும் ஒருதரம், 'மரா' என்று சொல்லு......" "மரா...மரா..." "அப்படியே சொல்லு" "மரா மரா மராம"......அவன் வாயிலிருந்து 'ராம' என்கிற அட்சரம் உதிர்ந்தது. பெரிய ரிஷியாஞன், பிறகு."

இப்போதும், கேட்கிருேம், இக்கதையினை,

மரா, என்று சொன்னவன், தொடர்ந்து சொல்லச் சொல்ல, "ராம" என்பது வந்து அவன், மிகப் பெரியவன் ஆனுன் என்பார்கள்—அதைச் சொல்வதன் மூலம் ராம நாமத்துக்குள்ள மகிமையைச் சொல்லுவார்கள்.

ஸ்ரீராமஜயம் — என்று லட்சத் தெட்டு எழுதினல், சங்கராச்சாரியார் ஆசிர்வாதம் தருவார் என்று, அந்த முயற்சியில் நேரத்தைச் செலவழிப்போரும் உண்டு.

ஆண்டவனின் திருநாமத்தை ஜபிக்கவேண்டும்—ஜபிக்க முடியாவிடில், ஒரு தடவையாவது சொல்லவேண்டும் — அப்படிச் சொல்வதற்குப்பதில் கூப்பிட்டால் கூடப்போதும் — என்று, நமது புராணப் பிரசங்கிகள், வர்ணிக்கிருர்கள்.

*

"கஜேந்திர மோட்சம், கதை தெரியுமோ?"

"தெரியுமே! முதலையின் வாயில் சிக்கிய யானையின் கதைதானே!!"

"ஆமாம்! சரியாகச் சிக்கிக்கொண்டது யானை. கோவிந்தா—நாராயணு, என்று கூவிற்று. சீமந்நாராயண மூர்த்தி, இலட்சுமி தேவியுடன், வைகுந்தத்தில் சொக்கட்டானடிக் கொண்டிருந்தார். யானையின் குரல், காதிலே விழுந்தது. எழுந்தார். கருடன்மீதேறிக்கொண்டுபறந்தார். சக்கராயுதத்தை வீசினர். பக்தனைக் காப்பாத்தினர்."

*

"இதென்ன! ஒரு பாண்டியன், தன் பொக்கிஷத்தையே, குளத்தில் கொட்டச் சொன்ன கதை தெரியுமோ?"

"அதென்னது...!!"

"மதுரையை ஆண்டான் ஒரு பாண்டியன். மகா, சிவபக்தன். ஒரு நாள், காட்டிலிருந்து வேட்டையாடிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தான். வழியிம், ஒரு குளம். அதிலே, ஏராளமான தவளைகள். மழைக்காலமானதால், கத்திக்கொண்டிருந்தன. தவளைகளின் கத்தல், மன்னன் காதில், 'அரகர' என்று ஒலித்தது. ஆகா, எனனே, இவர்தம் பக்தி!— என்று, தன் அரண்மனையிலிருந்த பொக்கிஷத்தையெல்லாம், தவளைப் பக்தர்களுக்குத் தானம் செய்தான்...அவனது பக்தியல்லவோ, ப்க்தி!!"

*

இப்படி, ஆண்டவனுடைய பெயர் மகிமையைப்பற்றி, ஏராளம் சொல்லுவார்கள்.

சொல்வோரிடம் பொதிந்துள்ள ஆர்வத்தை, நாம் கேலிசெய்யவில்லை. அப்படியாவது ஆண்டவன் நாமத்தைபஜித்தால், ஒரு நாள் ஒருபொழுதேனும் அவன் நாமத்தை உச்சரித்தால்; மோட்சம் கிடைக்கும், போகிற வழிக்கு நல்லகதி கிடைக்கும் என்று மனதார நம்புகிருர்கள்.

அப்படி நம்பும், அந்த நல்லவர்களுக்கு, இந்த வாரம் நிகழ்ந்த ஒரு பரிதாபகரமான சம்பவத்தைக் காட்ட விரும்புகிருேம். பரிதாபம் மட்டுமல்ல, வெளியார் கேட்டால் பரிகாசம் கூடச் செய்வார்கள். அவ்வளவு விந்தையும், வேதனையும் கலந்த சம்பவம்— கும்பகோணத்துக்கு அருகில் நிகழ்ந்திருக்கிறது.

காவடி தூக்குவோரும், 'கையில் உண்டியேந்தி உருண்டு வருவோரும், "கோவிந்தா! கோவிந்தா!" என்று கூவுவதைக் கேட்கிருேம். அதே கோவிந்தா எனும் சொல்லை, "ஆள், என்னப்பா, கோவிந்தாவாகிட்டானுமே...", என்பதற்கும், பயன்படுத்துவதுண்டு. அந்தக் கோவிந்தா, எனும் சொல், ஒரு பச்சிளம் தளிரின் உயிர் போகவே காரணமாயிருந்திருக்கிறது.

இளம், மாணவன், அவன்— ஏழாம் வகுப்பில் அய்யம்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தானும். பாபநாசம் தாலுகாவிலுள்ள, நெடுந்தெரு கிராமம் அவன் ஊர். அங்கே, குடமுருட்டியாறு ஓடிக்கொண்டிருக்கிறது. தன் சிநேகிதர்கள் பலருடன், குளிக்கப் போயிருக்கிருன்—தவறி, தண்ணீரில் விழுந்து, கரையேற முடியாமல் தவித்திருக்கிருன். அவன், பெயர், கோவிந்தன்.

கூடவந்தவர்கள், எதிர்பாராத ஆபத்தைக் கண்டு, "கோவிந்தா! கோவிந்தா!!", என்று கூச்சல் போட்டிருக்கிருர்கள்.

பக்கத்திலிருந்த படித் துறையில் குளித்துக் கொண்டிருந்த பெரியவர்கள், "ஏதோ, சிறுவர்கள் கூச்சல் போடுகிருர்கள்! எதையோ, கேலி செய்கிருர்

கள்!!'', என்று பேசாமலிருந்திருக்கிருர்கள்.

கோவிந்தனே, மூழ்கினன்! உதவி கிடைக்காததால், திண்டாடினன்!! சிறுவர்கள், ஏன் கூச்சல் போடுகிருர்கள் என்கிற விபரம் நீண்ட நேரத்துக்குப் பிறகு தெரிந்துபோய்ப் பையனைத் தூக்கிக்கொண்டு வந்து பார்த்தால், பிணமாகியிருக்கிருன்.

''மெயில்'', இச்செய்தியைத் தருகிறது.

கோவிந்தா! கோவிந்தா!!— என்று, கூறினல், எதுவும் சித்திக்கும், என்று நம்புகிருர்கள்.

குழந்தைகளும் அச்சொல்லைத்தான் கூவினர். சக்கராயுதம் ஏந்தியோ, சங்குடனே, ஆண்டவன் வராதது இருக்கட்டும். பக்கத்திலிருந்தவர்களே, 'கேலிக் கூத்து' என்று எண்ணிக் கொண்டிருந்திருக்கிருர்கள்.

பலன், ஒரு இளந்தரு, மரணத்தின் வாயிலுக்கு இரையாயிற்று.

*

**"இந்த ஆஸ்டலைக் கட்டியவர் என்ன நினைத்து வெங்கடேஸ்வரா ஆஸ்டல் என்று பெயர் வைத்திருப்பார்? இதில் படிக்கின்ற அனைவரும் காலையில் எழும்போது, ஸ்ரீவெங்கடேஸ்வரன் நாமத்தை நினைத்துப் பலன் பெறவேண்டும் என்றுதான் செய்திருப்பார். ஆனல், யாராவது அப்படிச் செய்கிருர்களோ?''**, என்று கேட்டிருக்கிருர், ஆச்சாரியார், சென்ற வாரம் சென்னையில் பேசுகிறபோது.

எவ்வளவோ அரசியல் அலைகள் இருந்தாலும், ஆச்சாரியார் அவர்களுக்கு, இதுபோன்ற சிரத்தைகள் மட்டும் குறைவதில்லை.

எழும்போது, வெங்கடேஸ்வரன் திருநாமத்தை நினைத்துக்கொண்டால், பலன் கிட்டுமாம்! பாபம், குறைந்து புண்யம் அதிகரிக்குமாம்!!

ஆஸ்டல் நிறுவியவர் நோக்கத்தையும், ஆச்சாரியாரது ஆசையையும் நாம் குறை சொல்லவில்லை. மனதாரக்கூட நம்பலாம், அவர்கள்.

கோவிந்தா! — போட்டுக்கொண்டு உருள்வோரும், குழந்தைகளுக்கு, ராமன்-கிருஷ்ணன்', என்று பெயர் வைப்போரும் கெட்ட எண்ணத்தோடா செய்வார்கள்? ஒருக்காலுமில்லை. கூப்பிடும்போதும், நினைக்கும்போதும், ஈசுவர ஞாபகம் வராதா என்கிற பேராசைதான்.

ஆனல், என்ன காண்கிறேம்? 'கோவிந்தா' என்பது கேலிக்குரியதாக இருப்பது ஒருபுறம் இருக்கட்டும். அந்தப் பெயர் கொண்டதால், காப்பாற்றப்படாமல் இறந்த பரிதாபத்துக்குரியவன் கதை ஒருபுறம் இருக்கட்டும்.

அப்படி ஆண்டவனை நினைப்பதாலோ அல்லது அந்தப் பெயர்களை வைத்துக்கொள்வதாலோ, ஏதாவது மாறுதல் கிடைக்கிறதா? காந்தியடிகளைக் கொன்றவன்விநாயகராம்! அவனுக்குப்பெயர் வைத்தபோது அவனைப் பெற்றவர்கள், கடவுள்களிலேயே முழுமுதற் கடவுளின் பெயரையே வைத்திருக்கிறேம் என்று நினைத்திருப்பார்கள். ஆனல், அவன் செய்த காரியம் என்ன? கொலை! படுகொலை!! இதுபோலவே, எத்தனையோ பேருக்கு நல்ல முறையில் ஆண்டவன் பெயர்களே இருக்கின்றன. அதனல் என்ன பலன்? தனலட்சுமி, என்கிற பெயர் ஒருத்திக்கு இருக்கும்-எப்போதும் வறுமையே தாண்டவமாடும்! அன்னலட்சுமி, என்கிற பெயர்ப்படி, அவள் பெரிய அன்னதாதாவாக விளங்க வேண்டும் — ஆனல், அப்பெயர் கொண்ட பலர் நித்தியப் பட்டினிகளாகத்தான் இருக்கிருர்கள்!! ஏன்? பக்தவத்சலம் இருக்கிருரே, எவ்வளவு அழகான பெயர்! ஆனல் அவரை நம்பிடும் மக்களுக்குக் குறைதீர்க்கும் குணாளராகவா, அவர் இருக்கிருர்!!

ஆண்டவன் திருநாமத்தை வைத்து, கூப்பிட்டால், பரகதி கிடைக்கும் என்று நம்புவோரைப் போலவே; அந்தப் பெயர்களை வைத்தால், அதுபோல, விளங்குவார்கள் என்று எதிர்பார்ப்போரும் உண்டு. சரசுவதி என்று வைத்தால் சகல கலைகளிலும் தேர்ந்து விளங்குவாள், பரமசிவம் என்று வைத்தால் எல்லோருக்கும் வல்லவனக இருப்பான், இப்படி ஒரு நம்பிக்கையுண்டு. அந்த நம்பிக்கை பலிக்குமேயானல் நிச்சயம் நமது நிதி அமைச்சர் சுப்பிரமணியம், குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தப்படுவார். ஏனெனில், அவர் பெயர்ப்படி, அவருக்கு இரண்டு மனைவிகள் அமைய வேண்டும். இருதார மணச் சட்டம் உடனே, அவரைப் பிடித்துப் போடும். காமராஜர் என்று பெயர்! கலியாணமே ஆகாத பிரம்மச்சாரியாகவல்லவா, இருக்கிருர்!!

பெயர்வைப்பது, இப்படித்தான் இருக்கவேண்டும் என்று வரையறுப்பது, அதனல் ஆண்டவன் பக்தி பெருகுமென நினைப்பது, எல்லாம் ஒரு வீண் பிரமையே அன்றி வேறல்ல. இந்தப் பெயர் வைக்கும் துறையில் புதுமையை, திராவிடரியக்கம் கண்டது, ஒருபோது கேலிக்குரியதாக இருந்தது. "என்னடா! எதிலும் புதுமை, புதுமை என்று சொல்லிக்கொண்டு என்னென்னமோ செய்கிருர்கள்'' என்று எண்ணியோருண்டு. இதனை, கம்யூனிஸ்டுத் தோழர்கள்கூடக் கேலி செய்ததுண்டு. ஆனல், தோழர் பி. இராமமூர்த்தி அவர்கள் தனது இரு குழந்தைச் செல்வங்களுக்கு பொன்னி—வைகை எனும் அருமையான பெயர்களைத்தான் வைத்திருக்கிருராம்!!

2-ம் பக்கத் தொடர்ச்சி

சட்டமும், டில்லியிலிருக்கும் குடியரசுத் தலைவரின் முத்திரையிட்டால்தானே, செல்லும்? அங்கே போனதும், டில்லி அச்சட்டத்தை 'சுப்ரீம் கோர்ட்டுக்கு'' பரிசீலனைக்காக அனுப்பியிருக்கிறதாம்! சட்டத்தில், சில இடங்கள் சரியில்லையென்ருல், குடியரசுத் தலைவர் அதைத் திருப்பி, மாகாண சட்டசபைக்கு அனுப்புவார், சட்டசபை மீண்டும் ஒருதடவை விவாதித்து, மாற்ற வேண்டியவைகளை மாற்றி, அனுப்பும். இதுதான் கையாளப்படும் வழக்கம். ஆனல் டில்லி, வழக்கத்துக்கு மாருக, சுப்ரீம் கோர்ட்டுக்கு அனுப்பியிருக்கிறது.

## இது; தவறு

என்று கண்டிக்கிருர், முண்டசேரி' அதுமட்டுமல்ல, டில்லியின் செயல்,

## மட்டரகமானது

என்றும் கூறுகிருர். அவர் கம்யூனிஸ்டு அமைச்சர்! எனினும், டில்லியின் கொடுமையை அனுபவிப்பதால், இந்தளவுக்குக் கண்டிக்கிருர்--மட்டரகமாம், எவ்வளவு எரிச்சல் தெரிகிறது வார்த்தையில்!!

# சேலம் மாநாட்டு முக்கிய தீர்மானங்கள்

ஜனவரி 6-ம் நாளன்று சென்னை நகரில் நேருவுக்குக் காட்டப்பட்ட கறுப்புக்கொடி கண்டனத்தின்போது ஆட்சியாளரின் அடக்கு முறைக்கு ஆளாகி, தோழர்கள் மொய்தீன் பிச்சை, கோவிந்தராவ் உயிர்நீத்தமைக்கு இம்மாநாடு தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களின் எதிர்பாராத மறைவால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவர்களின் குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

தென்னகத்தின் இணையற்ற கலைச் செல்வராய்விளங்கிவந்த நகைச்சுவை மன்னர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு இம்மாநாடு தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

*

தென்னகத் தலைவர்களை இழித்தும் பழித்தும் பேசிய பண்டித நேருவின் போக்கைக் கண்டித்து நாயகத்தின் தன்மானத்தை நிலைநிறுத்தும் விதத்தில் கழகம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி, கருப்புக் கொடி கண்டன நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திய கழகத் தோழர்களையும், பொது மக்களையும் இம்மாநாடு மனமார வாழ்த்துவதுடன், அரசியலாரின் அடக்குமுறைக்கு ஆளாகிப் படுகாயமுற்றும், சிறைபட்டும், கஷ்ட நஷ்டங்களைத் தாங்கிக்கொண்டும், அமைதியுடனும், பொறுப்புடனும், பணியாற்றிய தோழர்களை இம்மாநாடு பாராட்டுகிறது.

*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பேச்சுரிமையை அடக்கும் விதத்தில் பொதுக்கூட்டங்களுக்குத் தடை விதித்து, ஐயாயிரம் பேர்களைச் சிறையில் தள்ளி, இரண்டு தோழர்களை மாளச்செய்து, கூடியிருந்த மக்கள் மீது வரைமுறையின்றித் தடியடிப் பிரயோகங்களைச் செய்து, ஜனநாயக முறையில் அனுமதிக்கப்பட்டுள்ள கறுப்புக்கொடிக்கண்டனத்தை அடக்குவதற்காகக் கடுமையான அடக்குமுறைவெறியாட்டத்தைகட்டவிழ்த்துவிட்ட சென்னை அரசினரின் எதேச்சாதிகாரப் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது,

(அ) போலீசாரின் அத்துமீறிய நடவடிக்கைகள் குறித்து நீதி விசாரணை ஒன்றை நடத்துமாறு சென்னை சட்டசபையில் எழுப்பப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாதது கண்டு இம்மாநாடு வருந்துவதுடன், ஜனநாயகப் பண்பாட்டின்படி, உடன் நீதி விசாரணையை நடத்துமாறு இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

இரும்பு, மாக்னசைட் போன்ற பல வகைக் கனிப்பொருள்கள் சேலம் மாவட்டத்தில்வேண்டுமளவு புதைந்து கிடப்பதாக அறிந்தும் அவற்றைக் கவனித்து வெளியில் எடுத்து நல்ல தொழில் வளர்ச்சியைக் காண்பதற்கான திட்டங்களை வகுத்து ஆவன செய்யாமலிருப்பதைக் கண்டிப்பதுடன், கிடைக்கும் கனிப் பொருள்களைப் பயன்படுத்தி, தொழில் மயமாக்கும் வாய்ப்பையும், வசதியையும் உண்டாக்கித் தரவேண்டும் என இம்மாநாடு அரசாங்கத்தினரை வற்புறுத்துகிறது.

*

(அ) கைத்தறி நெசவுத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள இலட்சக் கணக்கான நெசவாளர் குடும்பங்களின் வேதனையைத் தீர்க்கவும்;

(ஆ) முன்பு தரப்பட்டுவந்த ரூ. 1-க்கு 9 புதிய காசுகள் தள்ளுபடியை மீண்டும் தரவும்;

(இ) கைத்தறித் துணிகள் வெளிநாடுகளில் நல்லமுறையில் விற்பனையாவதற்கு, கைத்தறித் துணி ஏற்றுமதிக் கார்ப்பரேஷன் அமைத்து, அதன் மூலம் கூட்டுறவு சங்கங்கள் தனியாரிடத்தில் கொள்முதல் செய்து உதவுமாறும்;

(ஈ) கரை போட்ட வேட்டி, சேலைகள் நெய்வதை கைத்தறிக்கு மட்டும் ஒதுக்கவேண்டுமென்றும்;

(உ) கைத்தறி வாரவிழாவைத் தென்னகத்தில் டிசம்பர் திங்கள் இறுதியில் தொடங்கி பொங்கல் நாள் வரை நடத்தவேண்டுமென்றும்;

(ஊ) அரசாங்க நிர்வாகத் துறைகளில் — குறிப்பாக பட்டாளம், போலீசு, மருத்துவ மனை முதலியவைகளில் வாங்கப்படும் துணிகளை கைத்தறித் துணிகளாக வாங்கி உதவ வேண்டியும் அரசாங்கத்தினரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கோரிக்கைக்கு இணங்கி நியாயவாரச் சட்டத்தில் கை ஏர் வாரம், மாட்டு ஏர் வாரம் தார்களை சாகுபடியாளர்கள் என ஒப்புக்கொண்டு, அவசரச் சட்டம் மூலம் தெளிவுபடுத்தி பூர்வாங்க மசோதா கொண்டுவருவது போன்று இன்னும் 60X40 பிரிப்பதில் உள்ள சிக்கல்களைப் போக்கி சாகுபடியாளர்களுக்கு நியாயமான வகையில் 60X40 கிடைக்க சட்டத்தையே திருத்துவதோடு, நிலத்திற்கு உச்சவரம்பு கட்டும் சட்டத்தை உடனடியாகக் கொண்டுவருமாறு இம்மாநாடு அரசினரை வற்புறுத்துகிறது.

*

சென்னை மாநிலப் பதிவு பெறாத அரசாங்க ஊழியர்கள் தமது சம்பளம்—பஞ்சப்படி ஆகியவைகளின் உயர்வுக்காக பலகாலமாகப்போராடி வந்தும், அக்கோரிக்கைகளை அரசியலார் இதுவரை தீர்த்துவைக்காதது கண்டு இம்மாநாடு மிகமிக வருந்துவதுடன், வாழ்க்கைத்தரத்துக்கும், விலை ஏற்றங்களுக்கும் தகுந்த வகையிலும், மத்திய சர்க்கார் ஊழியர்களுக்குச் சமமாகவும் சம்பளம், பஞ்சப்படி ஆகியவைகளைத் திருத்தி அமைக்கும்படி இம்மாநாடு அரசினரை வற்புறுத்துகிறது.

*


எதிர்பார்த்த ஏடுகள் தயாராகிவிட்டன!

அழகு தமிழில்!
அரசியல் விளக்க ஏடு!!
உரிமை முரசு கொட்டும் உன்னத நாடகம்
கலைஞர்
**மு. கருணாநிதி அவர்களின்**
**"உதயசூரியன்"**
விலை ரூ. 1—25

*

உணர்ச்சிமிக்க காவியம்!
உன்னதமான ஓவியம்!!
தென்னக மேடைக்கோர் புதிய படைப்பு
**பி. சி. கணேசன்**
அவர்களின்
**"எழுத்தாளன் காதலி"**
(நாடகம்)
விலை ரூ. 1—25

**முத்துவேல் பதிப்பகம்,**
77, மதுரை சாலை, திருச்சி-8.

தனிப் புத்தகம் வேண்டுவோர், புத்தக விலையுடன் 25, புதிய காசு சேர்த்து அனுப்புக.

இராமநாதபுரம் மாவட்ட

# தி. மு. க. 3-வது மாநாடு

## 22, 23-2-58-ஆம் (சனி ஞாயிறு) நாட்களில்

## தேவகோட்டை—வள்ளுவர் திடல்

### மஜீத் அரங்கில் நடைபெறும்.

| தலைவர்: | திறப்பாளர்: |
|---|---|
| **க. அன்பழகன்** எம்.ஏ., எம்.எல்.ஏ. | **எஸ். எஸ். இராசேந்திரன்** |

## அண்ணாதுரை, பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன்

மு. கருணாநிதி எம்.எல்.ஏ., ஈ. வெ. கி. சம்பத் எம்.பி., கண்ணதாசன்,
என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன், வி. பி. இராமன், ஆசைத்
தம்பி எம்.எல்.ஏ., புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், ப. உ. சண்
முகம் எம்.எல்.ஏ., ஏ. கே. வில்வம், அருண்மொழிவில்வம்,
கி-மனோகரன், கா-அப்பாதுரையார், அலமேலுஅப்பாதுரை,
சி. பி. சிற்றரசு, இரா. செழியன், இரெ. இளம்வழுதி,
எஸ். எஸ். தென்னரசு, சத்தியவாணிமுத்து, எம்.எல்.ஏ.,
ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ., ஆர். எஸ். பாண்டியன், இளமுருகு
பொற்செல்வி, பங்கயற்செல்வி, மதுரை முத்து, எம். எஸ். இராமசாமி,
அ. பொன்னம்பலனார், நடிப்பிசைப்புலவர் கே. ஆர். இராமசாமி,
நடிகமணி டி. வி. நாராயணசாமி, என். எஸ். இளங்கோ மற்றும் கழக
முன்னணி வீரர்களும், சட்ட மன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்வர்.

| முதல் நாள்: | இரண்டாம் நாள்: |
|---|---|
| 22—2—58 சனி இரவு | 23—2—58 ஞாயிறு இரவு |
| தோழர் **மு. கருணாநிதி** அவர்கள் நடிப்பதும், புதுமை நாடகமன்றத்தார் அளிப்பதுமான **" உதயசூரியன் "** நாடகம் | தோழர் **நாகூர் அனீபா** அவர்கள் குழுவினரின் இசை விருந்து |

இருநாட்களிலும்:
**எம். எஸ். தியாகராசன், சாவி. நடராசன், அல்வா**
குழுவினரின் இசை நிகழ்ச்சிகளும் உண்டு.

இருநாட்களுக்கும் நுழைவுக் கட்டணம்:—
**ரூ. 5, 3, 2,**
பெண்களுக்கு அணா 8

குறிப்பு:—மாநாட்டில் இருதினங்களிலும் உணவு வசதிகள் உண்டு. தனிக் கட்டணம் செலுத்தவேண்டும்.

இ. ல. ம. சவுந்தரபாண்டியன், வ. கு. தலைவர்.
நவ. மார்க்கண்டேயன், பொருளாளர்.

இராம. வெள்ளையன்,
மா. குருசாமி,
செயலாளர்கள்.